# தென்றல் முல்லை

Tamil Sangam of Greater Washington Inc.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க வெளியீடு

# Thenral Mullai

A Publication of Tamil Sangam of Greater Washington Inc.

திருவள்ளுவர் ஆண்டு - 2057 | ஏப்ரல் 2026 மலர்: 23 இதழ் : 13







## உள்ளே...


வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை 06
இது சுட்டிகளின் பக்கம் 07
அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் 08
சொல் விளையாட்டு 09
வெளிச்சம்: தமிழ் மரபு இசை மற்றும் தற்காப்புக்கலைகளின் அங்கீகரிப்பு 10
கவினும், அம்மாவும்: உணவே மருந்து 14
குறளோடு ஒரு கதை 16
ஈரான் - இஸ்ரேல் போர் 18
குழந்தைகளின் ஓவியங்கள் 20
அறிவோம்! தெரிவோம்! 24
பாரதியார் தமிழ்ப்பள்ளியின் சிறப்பான பொங்கல். 26
மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகத்தின் கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் 2026 28
இத்தருணம் 31
பசுமரத்தாணியாய் நம் ஊரின் நினைவுகள்.... 31
பெண்மை... பெருமை! 32
வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் 33
படைப்பும் படைப்பாளியும் 34
வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் 2025 பிக்கள்பால் போட்டி ஒரு விரிவான அறிக்கை 36
வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் பொங்கல் விழா 2026 38
பிரெடெரிக் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழா ஒற்றுமையும் உற்சாகமும் பொங்கிய திருநாள் 40
திரைவிமர்சனம்: தாய் கிழவி 44

# சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்



# Balagan Business & Tax Service



Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.



**We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via**

**e-mail: questions@balaganfinancials.com**

**or by phone:**

**(301) 931-1040/ (703) 723-9471**

**Please visit our website for more information:**

**http://balaganfinancials.com/mobile/**

# தமிழ்ச்சங்கச் செயற்குழு 2026

**தலைவர்**
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்

**துணைத்தலைவர்**
திரு. சீனிவாசன் சண்முகம்

**செயலாளர்**
திரு. அறிவுடைநம்பி புகழேந்தி

**துணைச் செயலாளர்**
திரு. பாலாஜி துரைசாமி

**பொருளாளர்**
திருமதி காமேஷ்வரி சந்திரசேகர்

**துணைப் பொருளாளர்**
திருமதி அன்னபூரணி அருணாசலம்

**செயற்குழு இயக்குநர்கள்**
திரு. கொழந்தவேல் இராமசாமி
திரு. எழில்வாணன் கலைவாணன்
திருமதி தீபா செந்தில்நாத்
திரு. பிரகாஷ் மாதேஷ்
செல்வி சுபஸ்ரீ சுசீந்தரன்
செல்வன் அஸ்வின் பாபுவிநாயகம்
திரு. மோகன்ராஜ் அண்ணாமலை


# தலைவர் உரை



அன்பு மிக்க வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம். உங்கள் அனைவருக்கும் செயற்குழுவின் சார்பில் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆண்டிற்கான செயற்குழுவில் பணிசெய்யும் வாய்ப்பினை எங்களுக்கு வழங்கிய உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நமது பொங்கல் விழாவில், கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. இந்த விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், குழந்தைகள் வழங்கிய வில்லுப்பாட்டு, மல்லர் கம்பம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மேலும் தமிழகத்திலிருந்து வந்திருந்த பின்னணிப் பாடகர் சத்தியன் அவர்களுடன், உள்ளூர்க் கலைஞர் ஷீபா பிரேம் அவர்கள் இணைந்து வழங்கிய இன்னிசை நிகழ்ச்சி மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சேர்ந்து ஆடிப் பாடி மகிழ்ந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

சங்க இலக்கியச் சிறப்புகளை நம் மக்களிடம் கொண்டுசேர்க்கும் ஒரு முயற்சியாக, நமது தமிழ்ச் சங்கத்தின் சார்பில் முதல்முறையாக "சங்க இலக்கியத் தொடர்ச் சொற்பொழிவு" நிகழ்ச்சி தொடங்கப்பட்டு இணைய வழியாக நடைபெற்று வருகிறது. முன்னாள் தலைவர் திரு. இரா. பிரபாகரன் அவர்களின் சீரிய முயற்சியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக, பேராசிரியர் இ. ஜே. சுந்தர் அவர்கள் வழங்கிய "பதிற்றுப்பத்தும் சேர நாட்டில் தமிழுக்கு நேர்ந்த விபத்தும்" என்ற நிகழ்ச்சியும், பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்கள் வழங்கிய "அகநானூறு - ஒரு அறிமுகம்" என்ற நிகழ்ச்சியும், பேராசிரியர் இராம. குருநாதன் அவர்கள் வழங்கிய "காதல் நாடகக் கலித்தொகையும் காற்றில் கலந்த வடதிசையும்" என்ற நிகழ்ச்சியும், பேராசிரியர் திருமதி. நித்யகல்யாணி பால்கனகராஜ் அவர்கள் வழங்கிய "ஐங்குறுநூறு - ஓர் அறிமுகம்" என்ற நிகழ்ச்சியும், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் முனைவர். வாசு அரங்கநாதன் அவர்கள் வழங்கிய "பரிபாடல் - ஓர் அறிமுகம்" என்ற நிகழ்ச்சியும் இதுவரையிலும் தொடர்ச்சியாக அரங்கேறியுள்ளன. நீங்களும் இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பயனடைய அன்புடன் அழைக்கிறோம். இதுவரை நடந்தேறிய நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவுகளை *https://www.youtube.com/@WashTam-*


**பொறுப்புத் துறப்பு:** புலம் பெயர்ந்த தமிழர்களின், தமிழ் ஆர்வலர்களின் தமிழ் மீது உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் படைப்புகள் தென்றல் முல்லை இதழில் வெளியிடப் படுகின்றன. ஆகவே, இந்த இதழில் வந்துள்ள படைப்புகளின் கருத்துகள் யாவும் படைப்பாளிகளின் கருத்துகள் ஆகும். எனவே, அந்தக் கருத்துகளுக்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கமோ அல்லது தென்றல் முல்லை ஆசிரியர் குழுவோ பொறுப்பேற்க இயலாது.

**Disclaimer:** The views and opinions expressed in articles published in ThenRal Mullai are those of the authors and do not necessarily reflect the official policy or position of Tamil Sangam of Greater Washington Inc or ThenRal Mullai editorial board.

*ilSangam* என்ற இணைய முகவரியில் கண்டுகளிக்கவும்.

நமது சங்கத்தின் காலாண்டு இதழான "தென்றல் முல்லை" இதழைத் தொடர்ந்து சரியான நேரத்தில் வெளிக்கொண்டு வரும் முனைவர். பாலா குப்புசாமி அவர்கள் தலைமையிலான ஆசிரியர் குழுவிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இதழ்களில் தொடர்ந்து நமது பிள்ளைகள் பலரும் இளம் எழுத்தாளர்களாகப் பயணிப்பதை நீங்கள் பலரும் அறிந்திருப்பீர்கள். இவர்களை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு, சமீபத்தில் "இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடல்" என்ற நிகழ்ச்சி இணையவழியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டது மிகுந்த நம்பிக்கையளிப்பதாக இருந்தது. அந்த இளம் எழுத்தாளர்களை நாமும் வாழ்த்தி மகிழ்வோம்.

இந்த ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணத்தை ஏற்கனவே செலுத்திவிட்ட உறுப்பினர்களுக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். இதுவரை உறுப்பினர் கட்டணம் செலுத்தாதவர்கள், தயவுசெய்து இப்போதே செலுத்தி, இந்த ஆண்டு முழுமைக்குமான பலன்களை அனுபவித்திட அன்புடன் அழைக்கிறோம். உங்களின் ஆதரவே தமிழ்ச் சங்கத்தின் முதன்மையான பலம்.

**இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!**
**வாழ்க தமிழ்! வளர்க நம் ஒற்றுமை!!**

**நன்றி வணக்கம்! அன்புடன்,**




**செந்தில் மலைக்கொழுந்து குமார்**
**தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்**

**Email: president@washingtontamilsangam.org**

## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள்...

சமூக ஊடகத்தில் உள்ளவர்கள் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ச்சங்க முகநூல் (FACEBOOK)/ புலனம் (WHATSAPP) குழுமத்தில் இணைந்திருங்கள். நம் செய்திகளை உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

இணையத்தளம் : WWW.WASHINGTONTAMILSANGAM.ORG
யூடுப் சேனல் : HTTPS://YOUTUBE.COM/C/TSGWTAMILSANGAM
மின்னஞ்சல் : INFO@WASHINGTONTAMILSANGAM.ORG

Instagram TSGWDC
WhatsApp
Social Media QR Code Connect with Us

Tamil Sangam of Greater Washington Inc.

## தென்றல் முல்லை ஆசிரியர்க்குழு 2026

**முதன்மை ஆசிரியர்:**
முனைவர் பாலா குப்புசாமி

**இணை ஆசிரியர்கள்:**
திருமதி விஜயா சிவப்பிரகாசம்
திருமதி ரஹீமா அலாவுதீன்
திருமதி அனிதா மதனகுரு
திருமதி அபிநயா மோகன்குமார்
திரு. கமலபாரதி பச்சியப்பன்
திரு. மோகன்ராஜ் பாலசுப்ரமணியன்
திருமதி மோனிகா ஜெரால்டு
திருமதி பானு கணேஷ்
திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

**இளம் துணை ஆசிரியர்கள்:**
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வன் ரக்ஷன் சீனிவாசன்
செல்வி கீர்த்தனா கணேஷ்
செல்வி தியா கமலபாரதி
செல்வி சாதனா திலக்
செல்வன் விநாயக் பாபு கணேஷ்
செல்வன் சூர்யா அறிவுமணி
செல்வி ரோஷினி செல்வம்
செல்வி ஆராதனா அருண்
செல்வி மான்சி சந்திரசேகரன்
செல்வி இனயா நிசாமுதீன்
செல்வி இனியா எழில் வடிவன்

**சிறப்பாசிரியர்கள்:**
திரு. நாஞ்சில் இ பீற்றர்
முனைவர் மீனாட்சி சந்திரசேகரன்
திரு. இளவழுதி வீரராசு
திருமதி சுமித்ரா பாபு கணேஷ்

**செயற்குழு தொடர்பாளர்கள்:**
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி
திரு. பாலாஜி துரைசாமி

**முன் அட்டைப்பட ஓவியம்:**
செல்வி ஜெசிகா லியோ ஆரோக்கியராஜ்

**இதழ் அச்சீடு நன்கொடை:**
திரு. குமார் சிவலிங்கம், ipaatti Inc.

*வடிவமைப்பு*
*திரு. இசக்கி, esakki2006@gmail.com*
*+91 9710755689, +91 9962505384*

# ஆசிரியர் உரை

உலகில் பிறந்து சிறந்த பல மொழிகளுள் சிறந்தே பிறந்த எம் தாய் மொழியாம் தமிழன்னைக்கும், தமிழுறவுகளுக்கும் வணக்கம்! முதற்கண் எனதருமை தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்! புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

இந்த இதழின் அட்டைப்படமும் இளம் படைப்பாளரின் ஆக்கத்தால் உருவானதே. வாசகர் குரல், அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், வெளிச்சம், உணவே மருந்து, குறளோடு ஒரு கதை, என் பார்வையில் ஈரான் இஸ்ரேல் போர், கவிதைகள், பிரடெரிக் தமிழ்ப்பள்ளி மற்றும் பாரதியார் தமிழ்ப்பள்ளியின் பொங்கல் கொண்டாட்டக் கட்டுரைகள், மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகத்தின் கலை இலக்கியப்போட்டிகள், படைப்பும் படைப்பாளியும், மற்றும் நம் தமிழ்ச்சங்கத்தின் நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள் எனப் பல்சுவை இதழாய் இவ்விதழையும் தந்துள்ளோம், படித்து, உங்களின் கருத்துகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். “வாசகர் குரல்” என்ற புதிய பகுதியில் உங்கள் கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இதழை சிறப்பாகக் கொண்டு வர உழைத்த தென்றல் முல்லை சக ஆசிரிய நண்பர்களுக்கும், சிறப்பான படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் என் நன்றிகள். தொடர்ந்து மூன்று வருடங்களாய் தங்களின் பங்களிப்பைச் சிறப்பாகச் செய்து வரும் அனைத்து இளம் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

நமது தென்றல் முல்லை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து வரும் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எங்கள் தென்றல் முல்லை ஆசிரியர்க் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள். தொடர்ந்து உங்களின் சிந்தனைகள், படைப்புகள் மற்றும் கருத்துகளை *thenral.mullai@gmail.com* எனும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். கோடை விடுமுறையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.

**கவின்மிகு தமிழின் புகழ்**
**தரணியெங்கும் பரவட்டும்!**
**மனிதம் தழைக்கட்டும்!**

மீண்டும் அடுத்த இதழில்
உங்களோடு பேசுகிறேன்.



தோழமையுடன்...

**முனைவர் பாலா குப்புசாமி**
**முதன்மை ஆசிரியர்**



# வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை

## திருமதி பிரியதர்ஷினி குமார்

உலகெங்கும் தமிழ் குரல் ஒலிக்கட்டும்!

அனைவருக்கும் வணக்கம்!

தென்றல் முல்லை இதழின் சனவரி 2026 வெளியீடு புத்தகம் படிக்க எனக்கு ஓர் வாய்ப்பு கிடைத்தது. இது ஒரு சாதாரண காலாண்டு இதழாக இல்லாமல் தமிழர்களின் பண்பாடு, மொழி, கலை மற்றும் சமூகச் செயல்பாடுகள் ஆகியவற்றின் உயிரோட்டத்தை அழகாகப் பதிவு செய்கிறது. புத்தகத்தின் முகப்பு படத்தில் உள்ள குழந்தைகளின் வண்ணமிகு பொங்கல் கோலமும், பொங்கல் நல்வாழ்த்துகளும் பார்ப்பவரின் கண்களைப் பறிக்கிறது.

இதழின் தொடக்கத்தில் தலைவர் செந்தில் மலைக்கொழுந்து குமார் அவர்கள் கூறும் வரிகள் “இது நமது சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!” இதழின் முழு உணர்வையும் பிரதிபலிக்கின்றது.

அதேபோல், முதன்மை ஆசிரியர் முனைவர் பாலா குப்புசாமி அவர்கள், இளம் தலைமுறையை முன்னிறுத்தும் நோக்கத்துடன் இதழை வடிவமைத்ததைத் தெளிவாகச் சொல்கிறார்.

இந்த சுட்டிகளின் பக்கம் “இந்த இதழின் இதயம்” என்று சொல்லலாம்.

அறிவோம்! தெரிவோம்! பகுதியில் செல்வி மான்சி சந்திரசேகரன் நம் தமிழர்கள் வாணிபம் செய்யச் சென்ற நாடுகளைப் பற்றி மிக அழகாகக் கூறியுள்ளார். அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை குழந்தைகள் பார்வையில் அறிமுகப்படுத்துவது மிகவும் அருமை.

மகிழ்ச்சிக்கான இரகசியங்கள், குடும்பம் பற்றிய கவிதைகள் படிக்கும் போது மனதிற்குள் அவ்வளவு மகிழ்ச்சி. திருக்குறளின் நெறிகளை குழந்தைகளுக்குப் புரியும் கதைகளாக மாற்றியமைத்த விதம் பாராட்டத்தக்கது.

ஓவியங்கள், விடுகதைகள், சொல் விளையாட்டுகள், வரலாற்றுப் பயணம்—என ஒவ்வொரு பக்கமும் குழந்தைகளின் கற்பனை உலகத்தை வாசகரிடம் கொண்டு சேர்க்கிறது. குழந்தைகளின் ஓவியங்கள் பகுதி, குறிப்பாக, ஒரு வண்ணத் திருவிழாவைப் போல அவர்களின் சிந்தனைகள் எவ்வளவு சுதந்திரமாகப் பறக்கின்றன என்பதைப் பார்க்கும் போது, கண்களுக்கு விருந்தாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

“வெளிச்சம” என்ற தலைப்பில், வாசிங்டன் வட்டாரப் பகுதியில் வாழும் திரு. சண்முகம் அவர்களின் நேர்காணலில் அவர் கேட்கபட்ட கேள்விகளும் பதில்களும் அருமை. திரு. சண்முகம் கூறியது போல பறை அடிக்க ஆரம்பித்த உடன் ஆடத்தெரியாதவர்களும் எழுந்து நடனம் ஆட வேண்டும் என்று தோன்றும். “இந்தப் பறை தமிழ்ச் சமூகத்துடைய காலக் கருவிகளுள் தாய்க் கருவி.” இந்த வரிகள் மரபு இசைக்கருவிகளின் பெருமையை நினைவூட்டுகிறது.

பராசக்தி திரைப்படத்தின் விமர்சனம், வரலாறு, அரசியல், மொழி ஆகியவற்றை இணைத்து சிந்திக்க வைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.


சிறுகதை - வரம்: குட்டிச் சாத்தானை மையமாகக் கொண்ட நகைச்சுவை-திகில் கலந்த கதை, வாசகர்களை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. வாழ்த்துகள் ஹாசினி! கின்னஸ் சாதனையை சிறப்பாக வெளிப்படுத்துகிறது இப் பக்கம். தெளிவான விளக்கம் மற்றும் அழகான வடிவமைப்பு சாதனையின் பெருமையை உணர்த்துகிறது.

பெண்மை! பெருமை! பகுதியில் மாலதி மைத்ரி போன்ற பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதி, இதழின் சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்துகிறது.

தமிழிசை விழா, குழந்தைகள் தின விழா, பறை இசை பற்றிய பகுதி—ஒவ்வொன்றும் தமிழ் மரபுகளின் பெருமையை நினைவூட்டுகின்றன.

சிறுகதை “சாசனம்” - இந்தச் சிறுகதையின் மூலமாக “கந்தர்வன்” அவர்களின் தமிழ் இலக்கியங்கள் மீதுள்ள அன்பை உணர முடிகிறது.

இந்த தென்றல் முல்லை இதழில் பணியாற்றிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்!!!




இன்றைய இளம் எழுத்தாளர்களும், சுட்டிகளும் மென்மேலும் படைப்புகளை நம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆசிரியர்க் குழுவிற்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்! உங்கள் அர்ப்பணிப்பு, திட்டமிடல், தொகுப்பு, வடிவமைப்பு— இதழை வாசகர்களின் கைகளில் ஒரு அழகிய அனுபவமாக மாற்றியுள்ளது. நன்றி!

தமிழ் வாழ்க! படைப்புகள் மலர்க!














சுட்டிகளுக்காக... சுட்டிகளோடு.... சுட்டிகளாலு...







# இது சுட்டிகளின் பக்கம்





(இளம் துணை ஆசிரியர்களால்)











# வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்:

# அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்

### கெட்டிஸ்பர்க் போர்க்களம் (Gettysburg Battlefield)

*Gettysburg Battlefield* அமெரிக்காவின் மிக முக்கியமான வரலாற்று நினைவிடங்களில் ஒன்றாகும். இது 1863ஆம் ஆண்டு நடைபெற்ற *Battle of Gettysburg* காரணமாக உலகப் புகழ் பெற்றது. இந்தப் போர் *American Civil War* காலத்தில் நடந்த மிக முக்கியமான போர்களில் ஒன்றாகும். இது மூன்று நாட்கள் நடைபெற்ற கடுமையான போராகும், இதில் சுமார் 50,000க்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தனர் அல்லது காயமடைந்தனர். இந்தப் போரில் யூனியன் படைகள் வெற்றி பெற்றதால், அமெரிக்காவின் ஒன்றுபட்ட நிலை பாதுகாக்கப்பட்டது.



செல்வி இனயா நிசாமுதீன்

இந்த இடத்தில் 1863ஆம் ஆண்டு, *Abraham Lincoln* *"Gettysburg Address"* என்ற புகழ்பெற்ற உரையை வழங்கினார். அந்த உரை சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இன்றும் இந்தப் போர்க்களம் தேசிய நினைவுச்சின்னமாகவும் தேசியப் பூங்காவாகவும் பாதுகாக்கப்படுகிறது. இங்கு வருகை தரும் மக்கள் அருங்காட்சியகங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் வழிகாட்டி சுற்றுப்பயணங்கள் மூலம் வரலாற்றை அறிந்து கொள்கிறார்கள். இது கல்வி மற்றும் சுற்றுலா நோக்கங்களுக்காகவும் முக்கியமான இடமாக விளங்குகிறது.




### மவுண்ட் ரஷ்மோர் (Mount Rushmore)

*Mount Rushmore* தெற்கு டகோட்டாவின் பிளாக் ஹில்ஸ் பகுதியில் அமைந்துள்ள ஒரு பிரபலமான சிற்ப நினைவுச்சின்னமாகும். இந்த மலைப்பாறையில் நான்கு அமெரிக்க அதிபர்களின் முகங்கள் செதுக்கப்பட்டுள்ளன: ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்சன், தியோடோர் ரூஸ்வெல்ட் மற்றும் அபிரகாம் லிங்கன்.



இந்த நினைவுச்சின்னத்தை *Gutzon Borglum* வடிவமைத்தார். இந்த சிற்பம் 1927ஆம் ஆண்டு தொடங்கி 1941ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. ஒவ்வொரு முகமும் சுமார் 60 அடி (18 மீட்டர்) உயரம் கொண்டது. இந்த நினைவுச்சின்னம் அமெரிக்காவின் பிறப்பு, வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டைக் குறிக்கிறது. இந்த மலைப்பாறையில் சிற்பம் செதுக்கும் போது, வெடிப்புகள் மற்றும் துல்லியமான செதுக்கும் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன, இது ஒரு பெரிய கட்டிடக்கலை மற்றும் பொறியியல் சாதனையாகும். இன்று, இது ஒரு முக்கியமான சுற்றுலா தலமாக இருந்து, அமெரிக்காவின் தேசிய பெருமையை பிரதிபலிக்கிறது.

# சொல் விளையாட்டு





**செல்வி இலக்கியா பாலமுருகன்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு சொற்களைக் கண்டறிக.

### ஒன்பதெழுத்துச் சொல்

1. முதல் மற்றும் இரண்டாம் எழுத்தைச் சேர்த்தால் தூரத்தைக் குறிக்கும் சொல்
2. மூன்று, நான்கு, மற்றும் ஐந்தாம் எழுத்தைச் சேர்த்தால் பார்ப்பது என்று பொருள் படும்
3. ஏழு, எட்டு, மற்றும் ஒன்பதாம் எழுத்தைச் சேர்த்தால் கண்ணோடு தொடர்புடைய பொருள்
4. ஏழு, மற்றும் ஒன்பதாம் எழுத்தைச் சேர்த்தால் பெண்ணின் மற்றொரு பெயர்.

### ஏழெழுத்துச் சொல்

1. முதல், இரண்டு மற்றும் மூன்றாம் எழுத்தைச் சேர்த்தால் ஒருவர் துன்பத்தில் இருக்கும்போது செய்வது
2. ஐந்து, ஆறு மற்றும் ஏழாவது எழுத்தைச் சேர்த்தால் நம் உடலின் ஒரு அங்கம்
3. இரண்டு, ஆறு மற்றும் ஏழாவது எழுத்தைச் சேர்த்தால் ஒரு பொருளின் மேன்மையைக் குறிக்கும்
4. முதல், ஆறு மற்றும் ஏழாவது எழுத்தைச் சேர்த்தால் தாவரங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுவது.

**விடைகள் 23 ஆம் பக்கம் பார்க்கவும்**



வெளிச்சம்

தொகுப்பு: செல்வி இனியா எழில் வடிவன் மற்றும் திருமதி அபிநயா மோகன்குமார்

# தமிழ் மரபு இசை மற்றும் தற்காப்புக்கலைகளின் அங்கீகரிப்பு

வணக்கம், தென்றல் முல்லை வாசகர்களே!

இன்றைக்கு நாம் திரை சார்ந்த (Digital) உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தச் சூழலிலும் சாதாரண மரக்கம்பத்தைப் பயன்படுத்தி மனித அசைவுகளின் நுணுக்கங்களையும், எதிரியின் உளவியலையும் புரிந்துகொள்ள உதவும் ஒரு பாரம்பரியக் கலை தான் மல்லர்கம்பம். இந்தக் கலை இன்றைய காலத்திற்கேற்ப எவ்வாறு புதுப்பிக்கப்பட்டு, காலத்தோடு இணைந்து பயணிக்கிறது என்பதை மல்லர்கம்பப் பயிற்சியாளர் திருமதி தேவிகா அவர்கள் இங்கே நமக்கு விளக்குகிறார். அவர்களுடன் நடைபெற்ற நேர்காணலை இங்கே பார்க்கலாம்.



**உங்களைப் பற்றி ஒரு சிறிய அறிமுகம் கொடுக்க முடியுமா?**

என் பெயர் தேவிகா. என் சொந்த ஊர் பாண்டிச்சேரி,அங்கு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் உடற் கல்வியில் எம்.பில் படித்தேன். நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது மல்லர்கம்பம் பற்றி அறிமுகப்படுத்தினார்கள். இது ஒரு கடினமான விளையாட்டு என்றாலும், அதை முயற்சி செய்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கிருந்தது. அதனால் தான் நான் மல்லர்கம்பம் கற்றுக் கொண்டேன். நான் மல்லர்கம்பம் கற்றுக் கொண்ட காலத்தை விட இப்போது இந்த விளையாட்டு மிகவும் பிரபலமாகியுள்ளது. பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்தபோது எனக்குத் தெரிந்ததை என் மாணவர்களுக்கும் கற்றுக்கொடுத்தேன். அவர்கள் பள்ளி ஆண்டு விழாவில் அதைச் செய்து காட்டினார்கள். நான் அமெரிக்கா வந்தபோது நியூ ஜெர்சியில் மல்லர்கம்பத்திற்கான ஒரு சங்கம் இருப்பதை அறிந்து அதில் சேர்ந்தேன். தற்போது வெர்ஜீனியாவிலும் ஒரு பயிற்சிக் கழகம் உள்ளது. நான் கற்றுக்கொண்ட காலத்தில் அதிகமாக ஆண்களே இதில் கலந்து கொண்டார்கள். ஆனால் இப்போது பெண்களும் அதிக ஆர்வம் காட்டி வருவது மகிழ்ச்சியான மாற்றமாக உள்ளது.



**மல்லர்கம்பத்தில் உங்களுக்கு எத்தனை வருட அனுபவம் உள்ளது?**

எனக்குத் தனிப்பட்ட முறையில் சுமார் ஐந்து வருட அனுபவம் உள்ளது. தற்போது குடும்பச் சூழ்நிலை காரணமாக முழுமையாக ஈடுபட முடியவில்லை. இருந்தாலும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வகுப்புகளிலும், பயிற்சிகளிலும் கலந்து கொண்டு வருகிறேன்.

**உங்கள் மாணவர்களை போட்டிக்காக எப்படித் தயார் படுத்துகிறீர்கள்?**

இப்போது அமெரிக்காவில் மல்லர்கம்பத்திற்குத் தனிப்பட்ட போட்டிகள் அதிகமாக இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் மாநில நிலை, மண்டல நிலை, பள்ளி நிலை போன்ற பல நிலைகளில் போட்டிகள் நடத்தப் படுகின்றன. இந்தப் போட்டிகளில் தேசிய அளவிலும் பங்கேற்க தமிழ்நாடு அரசு ஆதரவு வழங்குகிறது. முதலில் மல்லர்கம்பத்தில் ஆர்வம் கொண்ட குழந்தைகளைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்குவோம். காலை, மாலை என இரண்டு வேளைகளில்



திருமதி தேவிகா

மூன்று மாதங்கள் தொடர்ந்து பயிற்சி நடைபெறும். அதில் தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளை மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க உதவுவோம். மாநில அளவில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்குத் தேசிய அளவிலான போட்டிக்கான பயிற்சிகள் தொடங்கப்படும்.

**பயிற்சியின் போது குழந்தைகளுக்காக பின்பற்றப்படும் பாதுகாப்பு முறைகள் என்ன?**

மல்லர்கம்பம் பார்ப்பதற்குக் கொஞ்சம் கடினமாகத் தோன்றலாம். எந்த விளையாட்டிலும் ஒரு அளவிற்கு ஆபத்து இருக்கிறது. ஆனால் மல்லர் கம்பத்தில் முறையான பாதுகாப்புப் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. முதலில் தரை அடிப்படையிலான உடற்பயிற்சிகள் (ப்ளோர் எக்சர்சைஸ்) எனப்படும் ஆரம்ப யோகா பயிற்சிகளில் இருந்து தொடங்குவோம். மல்லர்கம்பம் என்பது ஜிம்னாஸ்டிக்ஸ், ரெஸ்லிங், யோகா ஆகிய மூன்றும் இணைந்த ஒரு பயிற்சி முறை. முதற்கட்டமாக குழந்தைகளுக்கு உடல் வளைவு மற்றும் நெகிழ்வுத்தன்மைக்காக அடிப்படை ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சிகள் சொல்லித் தரப்படும். பின்னர் யோகா முறைகளும் கற்றுக்கொடுக்கப்படும். அதன் பிறகு ரெஸ்லிங் போன்ற சமநிலைப் பயிற்சி களும் நடத்தப்படும். குழந்தைகளை ஒருபோதும் தனியாக மல்லர்கம்பம் செய்ய அனுமதிக்க மாட்டோம். அவர்கள் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை பயிற்சியாளர்கள் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருப்பார் கள். மேலும் ஸ்லிப் ரோல் போன்ற பாதுகாப்புப் பயிற்சிகளும் சொல்லித் தரப்படுகின்றன. இதன் மூலம் குழந்தைகள் ரோல்செய்து உடல் அடிபடாமல்



**செல்வி இனியா எழில் வடிவன்**



**திருமதி அபிநயா மோகன்குமார்**

தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**மற்ற விளையாட்டுகளிலிருந்து மல்லர்கம்பம் எப்படி வேறுபடுகிறது?**

மல்லர்கம்பத்திற்கு மிகவும் முக்கியமானது கைகளின் வலிமை. உங்கள் கைகள் வலுவாக இருந்தால் மல்லர்கம்பத்தை எளிதாகச் செய்ய முடியும். அதற்காகத்தான் ஆரம்பத்தில் யோகா மற்றும் கைகளை வலுப்படுத்தும் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக கைகளுக்கான பயிற்சிகள், புஷ்-அப்ஸ் போன்ற பயிற்சிகள் மிகவும் முக்கியமானவை.

**புதிதாக மல்லர்கம்பத்திற்கு வரும் குழந்தைகளுக்கு எப்படிப் பயிற்சி அளிப்பீர்கள்?**

முதலில் குழந்தைகளின் கைகளுக்குத் தேவையான வலிமையை உருவாக்கும் பயிற்சிகளைக் கொடுப்போம். அதன் பிறகு ப்ளோர் எக்சர்சைஸ் போன்ற அடிப்படைப் பயிற்சிகளை கற்றுக் கொடுக்கிறோம். நாம் சிறுவயதில் ஒரு மரத்தைப் பார்த்தால் அதில் ஏறிப் பழகுவோம் அல்லவா? அதேபோல குழந்தைகளுக்கும் மரம் ஏறுவது போன்ற அடிப்படை இயக்கங்களைக் கற்றுக் கொடுப்போம். ப்ளோர் எக்சர்சைஸ் மற்றும் ஸ்ட்ரெங்த் ட்ரெயினிங் ஆகியவற்றை சரியாகக் கற்றுக் கொண்டால் கம்பத்தில் ஏறுவது அவர்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும்.

**என்ன வகையான ப்ளோர் எக்சர்சைஸ்கள் சொல்லித் தருகிறீர்கள்?**

ரொட்டேஷன் ஹாண்ட் மூவ்மெண்ட்ஸ்-இல் தொடங்கி, ஓடுதல், குதித்தல், லஞ்சஸ், தோப்புக்கரணம், ஜம்பிங் ஜாக்ஸ் போன்ற பல தசைகளை வலுவாக்கும் பயிற்சிகளைக் கற்றுக்கொடுப்போம்.

**மல்லர்கம்பம் கற்றுக்கொள்ள குழந்தைகளின் ஆரம்ப வயது என்ன?**

குழந்தைகள் ஐந்து வயதிலிருந்தே மல்லர்கம்பம் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கலாம். அந்த வயதிலிருந்தே யோகா, ஜிம்னாஸ்டிக்ஸ், போன்ற பயிற்சிகள் கற்றுக்கொடுப்பதால் அவர்கள் உடல் ரீதியாக வலுவானவர்களாக வளர்கிறார்கள்.

**பயிற்சி வகுப்புகள் எப்படி நடைபெறும்?**

பொதுவாக பயிற்சி வகுப்புகள் இரண்டு மணி நேரம் நடைபெறும். முதலில் ரொட்டேஷன் எக்சர்சைஸ்களுடன் தொடங்கி, யோகா மற்றும்







ஸ்ட்ரெங்த் ட்ரெயினிங் வரை பல கட்டங்களாக நடைபெறும். குழந்தைகளை குழுக்களாகப் பிரித்து பயிற்சி அளிப்போம். ஒரு குழுவிற்கு கம்பத்தில் செய்யும் மல்லர்கம்பப் பயிற்சிகள் சொல்லித் தரப்படும். மற்றொரு குழுவிற்கு ரோப் மல்லர்கம்பப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படும்.

பயிற்சியாளர்கள் ஒவ்வொரு குழந்தையையும் கவனமாகக் கண்காணித்துக் கொண்டு இருப்பார்கள்.


சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்



ஆண்டி சாவித்திரி கிரி
& ஜெகதா கிரி
ஓவியா கிரி,
அகிலன் கிரி, நேயா கிரி

SOFTSQUARE LLC, CHENNAI / USA


### தொடக்க நிலை மாணவர்களை அடுத்த நிலைக்கு எப்படித் தேர்வு செய்கிறீர்கள்?

ஒவ்வொரு ஆண்டும் நியூ ஜெர்சியில் இருந்து பயிற்சியாளர்கள் வந்து குழந்தைகளின் திறமையை மதிப்பீடு செய்கிறார்கள். இதில் முதல் நிலை, இரண்டாம் நிலை போன்ற கட்டங்கள் உள்ளன. முதல் நிலையில் அடிப்படை யோகா மற்றும் ஸ்ட்ரெங்த் பயிற்சிகள் மட்டுமே இருக்கும். அதில் தேர்ச்சி பெறும் குழந்தைகள் இரண்டாம் நிலைக்கு முன்னேறுவார்கள். நடுவர்கள் ஒரு குறிப்பிட்ட பயிற்சியை செய்யச் சொல்லும்போது குழந்தைகள் அதை எவ்வாறு செய்கிறார்கள் என்பதை வைத்து மதிப்பீடு செய்வார்கள். அதன் அடிப்படையில் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

### மல்லர்கம்பப் பயிற்சிக்கான கட்டணம் எவ்வளவு?

பயிற்சிக்கான கட்டணம் மாதத்திற்கு சுமார் 150 டாலர்கள். அந்தக் கட்டணங்கள் அனைத்தும் நியூ ஜெர்சியில் உள்ள மல்லர்கம்ப ஃபெடரேஷன் சங்கத்திற்கு அனுப்பப்படுகின்றன.

### மல்லர்கம்பம் செய்வதால் கிடைக்கும் உடல் நன்மைகள் என்ன?

மல்லர்கம்பம் பயிற்சி செய்வதால் தலை முதல் பாதம் வரை உடலின் அனைத்து தசைகளும் வலுவடைகின்றன. பொதுவாக மூச்சுத்திணறல் போன்ற பிரச்சனைகள் உள்ளவர்களுக்கும் இது ஒரு நல்ல பயிற்சியாகும். சிறுவயதிலேயே குழந்தைகள் இதைக் கற்றுக்கொண்டால் ஒழுக்கமும் ஆரோக்கியமான பழக்கவழக்கமும் உருவாகும். உதாரணமாகக் கூடைப்பந்து விளையாட்டில் கைகளுக்கு அதிக வேலை இருக்கும். ஆனால் மல்லர்கம்பத்தில் உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சமமாகப் பயிற்சி கிடைக்கும்.

மல்லர்கம்பம் என்ற இந்தப் பாரம்பரியக் கலை உலக அரங்கில் ஜொலிப்பது சாதாரண விஷயம் அல்ல. மல்லர்கம்ப உலகக் கோப்பை போட்டிகள் 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றபோது இந்திய மாணவர்கள் அதிக விருதுகளைப் பெற்றது பெருமைக்குரிய விஷயம். ஒரு கம்பத்தின் மீது ஏறி நிற்பதே அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும். அதிலும் புவி ஈர்ப்பை எதிர்த்துப் பல சாகசங்களைச் செய்வது வியப்பை ஏற்படுத்துகிறது. “என்னால் இதைச் செய்ய முடியும்” என்ற நம்பிக்கை மல்லர்கம்பம் போன்ற விளையாட்டுகள் மூலம் உருவாகிறது. அந்த நம்பிக்கை விளையாட்டில் மட்டும் அல்லாமல் வாழ்க்கையின் பல பகுதிகளிலும் நமக்கு உதவுகிறது.


Zillion
Technologies
Thought beyond the DOT
CMMI Level 3 & ISO 9001:2008 Certified
GLOBAL EXPERIENCE IN TECHNOLOGY SERVICES AND CONSULTING...
helping our customers reach beyond what they think is possible.
Zillion Technologies' innovative products bridge the gap between business and technology:
core expertise
· IT Modernization
· Digital Transformation
· Enterprise Mobility
· Cloud Solutions
· Cyber Security
· AI / ML / DL // Analytics
· Testing / QA
· Healthcare Management
· Project Management
· IT Outsourcing
· Software Architecture
· System Engineering
17%
15%
9%
16%
9%
14%
6%
10%
4%
Web Technologies
Cloud Solutions
Cyber Security
ERP
IT Modernization & Digital
Mainframe
CRM
.Net
Embedded Technology
Call 703.579.6891
or visit us at
zilliontechnologies.com
20745 Williamsport Place | Ashburn, VA 20147
Email: anthony@zilliontechnologies.com



# கவினும், அம்மாவும்: உணவே மருந்து



ஆக்கம்: செல்வன் கவின் விஸ்வசாரதி மற்றும் திருமதி கீதாதேவி சுந்தர்ராஜ்

குழந்தைகளிடம் ஆரோக்கியமான பழக்கங்களை உருவாக்குவதில் குடும்பத்தின் பங்கு மிக முக்கியமானது.

நல்ல உணவு, நல்ல பழக்கம், நல்ல எண்ணங்கள் — எல்லாம் நல்ல வாழ்க்கையைத் தரும்.

பள்ளியில் இருந்து வந்த உற்சாகம்............

அன்று பள்ளியில் இருந்து வீடு திரும்பிய கவின் முகத்தில் புது விதமான உற்சாகம் தெரிந்தது.

“அம்மா! இன்று ஆசிரியர் உணவு பற்றியும், திருவள்ளுவர் சொன்ன குறள் பற்றியும் சொன்னார்,” என்று அவன் ஆவலுடன் ஆரம்பித்தான்.

அம்மா புன்னகையுடன் கேட்டார்: “என்ன சொன்னார்?”

கவின் உடனே குறளைப் பாடினான்:

**“அற்றால் அளவறிந்து உண்க;**
**அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.”**

பொருள்: அளவறிந்து உணவு உண்டால் உடல் நலமாக நீண்ட நாள் வாழலாம்.

அம்மா மகிழ்ச்சியுடன் தலையசைத்தார்.

“சத்தான உணவை அளவோடு சாப்பிடுதல்தான் உடலுக்கு பெரிய மருந்து,” என்றார்.

### கவினின் புதிய விடுகதை

சில நேரம் கழித்து கவின் மீண்டும் உற்சாகத்துடன் சொன்னான்:

“அம்மா! இன்று நான் நண்பர்களுக்கு ஒரு புதிய விடுகதை கேட்கப் போகிறேன். அ, ஆ வரிசையில் அன்னாசி, ஆப்பிள்... அடுத்தது என்ன தெரியுமா?”

அம்மா ஆர்வமாக: “என்ன அந்த விடுகதை?” என்று கேட்டார்.

கவின் சிரித்தபடி சொன்னான்:

மரத்தில் பிறந்து
குடத்தில் தண்ணீர்
வைத்தது போல
திறந்தால் குடிக்கலாம் - அது என்ன?
பதில்: இளநீர்

மரத்தின் மேல் தொங்குவேன்,
பழுத்தால் இனிப்பாக இருப்பேன்,
சிறியதாக இருந்தாலும்
சக்தி நிறைய தருவேன் -
நான் யார்?
பதில்: ஈச்சம்பழம்

அம்மா பெருமையுடன் கூறினார்:

“அருமை கவின்! ஈச்சம்பழம் இரும்புச் சத்து நிறைந்தது. உடலுக்கு உடனடி சக்தி தரும். இது இயற்கை தரும் சிறந்த ஆரோக்கிய உணவு.

பழங்கள், காய்கறிகள், கீரைகள், தானியங்கள் இவை எல்லாம் நம்மை நோய்களிலிருந்து காக்கும். ஆனால் நினைவில் வை... அளவோடு சாப்பிட வேண்டும்.”

கவின் கவனமாகக் கேட்டான்.

அவன் புரிந்து கொண்டான் —

உணவு என்பது சுவைக்காக மட்டுமல்ல, உடல் நலத்திற்கான மருந்தும் ஆகும்.

ஒரு நல்ல அறிவுரை,
ஒரு நல்ல பழக்கம்,
ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும்.

நல்ல உணவு - நல்ல உடல் - நல்ல வாழ்க்கை!






**Your neigborhood DMV2K Realtor in VA & MD**

**All my Commission is yours except 0.5% -1%** *Restrictions Apply

**Umadevi Natarajan**
**Senthil Kumar**
**+1 703 932 5240**
**dmv2krealtor@gmail.com**



IKON
Ikon Realty of Ashburn
(703) 723 3434
44355 Premier Plaza #110, Ashburn, VA 20147

* Buyer needs to pay additional $500 Broker Admin Fee per transaction

*****************************************

Licensed in VA, MD, PA, NJ, GA, TX, AZ, CO, MN

VM VEMA Mortgage LLC

**Call me Today for Special Rates on Purchase & Refinance!**

Scan here to get daily updates on mortgage rates

**SENTHIL KUMAR**
NMLS # 2494030
C: +1 425 503 5147
SENTHILKUMAR@VEMAMORTGAGE.COM

**VEMA MORTGAGE LLC**
NMLS # 1019911

*****************************************

**ACUPUNCTURE WELLNESS CENTER**
Ashburn, VA

**Umadevi Natarajan**

**Traditional Acutouch Therapist**

**+1 469 353 9425**

anbuthirucoil@gmail.com

**Board Certified Holistic Health Practitioner**

Certificate Number: 271534401




# சாணக்கியமும் வெண்தாடி சிங்கமும்

ஒரு காட்டில் ஒரு தந்திரமான நரி வாழ்ந்து வந்தது. எப்படியாவது மற்றவர்களை ஏமாற்றி குறுக்கு வழியில் முன்னேற வேண்டும் என்று யோசித்து வந்தது. ஒரு நாள் அந்த நரிக்கு ஒரு பழங்கால விளக்கு கிடைத்தது. அதை வைத்து, காட்டின் மற்ற விலங்குகளை ஏமாற்றி வாழலாம் என்று திட்டம் தீட்டியது. "இந்த விளக்குக்கு உள்ளே கடவுள் இருக்கிறார். நான் கடவுளின் கட்டளையை நிறைவேற்றும் ஏழைப் பூசாரி என நரி வேடமிட்டது. என்னிடம் கடவுள் பேசுவார். அவர் சொல்வதைக் கேட்டு நான் உங்களுக்கு அறிவுரை கூறுவேன். அதைச் செய்ய வில்லை என்றால் கடவுள் உங்களைத் தண்டிப்பார்!" என்று சொல்லிக் கொண்டு தந்திரமாக ஊரை ஏமாற்றிக் கொண்டு இருந்தது.

"கடவுள் எப்போ பேசினார்? எங்களுக்கு எதுவும் கேட்கவில்லையே?" என விலங்குகள் கேட்டன. "அவர் பேசுவது கெட்டவர்களுக்குக் கேட்காது. நல்லவர்களுக்கு மட்டும்தான் கேட்கும்.." என்று சொன்னது நரி. அங்கே வாழ்ந்த காட்டு எருமையிடம் தினமும் நீ கடவுளுக்கு ஒரு கேலன் பால் தர வேண்டும். இல்லையெனில் உனக்குக் கடவுள் பெரிய தண்டனையைக் கொடுப்பார் என மிரட்டியது நரி.

காட்டு எருமை, நரியின் சொல்படி செய்யவில்லை. அந்த மாதம் ஒரு வேடன், நடந்து போகும் பாதையில் பள்ளம் வெட்டி, காட்டுக் கொடிகளைப் போட்டு, யானையை பிடிப்பதற்காக வெடி வெடித்தான். சத்தத்தில் பயந்து ஓடிய எருமை வேடனின் கொடிகளில் கால் தடுக்கி கீழே விழுந்தது. இதைப் பார்த்த ஒரு மான், "பார்... பார்... கடவுளுக்கு பால் கொடுக்காததால், கடவுள் காட்டு எருமையை தண்டித்து விட்டார்!" என்று சொல்லியது. இந்த வதந்திச் செய்தி கேட்டு பயந்த மற்ற விலங்குகள், அன்றிலிருந்து நரியின் வீட்டிற்கு வந்து பால், பழம், முட்டை என எல்லாப் பொருட்களையும் காணிக்கையாகக் கொடுத்தன.

இதுபோல தினமும் ஏதாவது சூதும் வாதும் தந்திரமும் செய்து, காட்டில் இருந்த மிருகங்களை ஏமாற்றியது நரி. அந்தக் காட்டிலேயே ஒரு வெண்தாடி சிங்கம் வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கம் ஏன்? எதற்கு? என கேள்விகளை யாரிடமும் கேட்கும் துணிச்சல் கொண்டது. அடிபட்ட காட்டு எருமை தனக்கு ஏற்பட்ட காயத்தையும், அதை வைத்துக் கொண்டு பலனை அனுபவிக்கும் நரியைப் பற்றியும் சிங்கத்திடம் கூறியது.



வெண்தாடி சிங்கம், தந்திரமாக ஏமாற்றும் நரிக்கு ஒரு பாடம் புகட்ட நினைத்தது. நரிக்கு காணிக்கையாக சிங்கம் பத்து சாட்டைகளைக் கொண்டு சென்றது. "நரியே நரியே... உனக்குப் பாதுகாவலாக இருக்கச் சொல்லி, இறைவன் என் கனவில் கூறினார். தினமும் உனக்கு 100 சாட்டையடிகள் கொடுத்தால் தான் இனிமேல் நீ சொல்லும் வாக்கு பலிக்குமாம். வாருங்கள், இன்றைக்கான சாட்டையடிகளை வாங்கிக் கொள்ளுங்கள்..." என்று சொல்லியது சிங்கம் .

"100 சாட்டையடியா?" என்று கேட்டது நரி . "ஆமா, வேண்டுமென்றால் விளக்குக்குள் இருக்கும் உன் கடவுளிடம் கேள். அவர் பேசுவது எங்கள் காதுகளில் விழுகிறதே உனக்குக் கேட்க வில்லையா? அப்போ நீ நல்லவன் இல்லையா? வந்து சாட்டையடிகள் வாங்கிக் கொள்..." என்றது சிங்கம். நரி 100 சாட்டையடிகளை நினைத்துப் பயந்து போய், தன் பொய் பித்தலாட்ட வாழ்வை ஒப்புக் கொண்டது. இனி கடவுளின் பெயரால் காசு பார்க்க மாட்டேன் என்று மற்ற மிருகங்களிடம் மன்னிப்பு வேண்டியது.



**செல்வி தியா கமலபாரதி**

அதிகாரம் - 36 மெய்யுணர்தல்

குறள் 355

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு


எந்தப் பொருளானாலும், அது கடவுளாகவே காட்சி தந்தாலும், அதன் வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாமல், அதுபற்றிய உண்மையை உணர்வதுதான் அறிவுடைமையாகும்.





# விடுகதைகள்





**செல்வன் ஆதர்சன் அசோக்**

1. பல்லைப் பிடித்து அழுத்தினால் பதறிப்பதறி அழுவாள். அது என்ன?
2. வெயிலுக்குக் காய்வான். தண்ணீருக்குப் பொங்குவான். அது என்ன?
3. போருக்குப் போகாத வீரன், போர்க்களத்தையே விரட்டி விடுவான். அது என்ன?
4. பாலாற்றில் கருப்பு மீன் நீந்துது. அது என்ன?
5. பாங்காய் இருப்பாள், பட்டென்று போவாள். அது என்ன?
6. பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன?
7. தண்ணீரில் விளையும் கல், தண்ணீரில் கரையும் கல். அது என்ன?
8. தலையில் அடித்தால், வாய்விட்டு அழுவான். அது என்ன?
9. சிவப்புபைக்குள்சில்லறைகொட்டிகிடக்குது. அது என்ன?
10. சிவப்பு நிறக் காளை, நீருக்குள் பதுங்கும். அது என்ன?

விடைகள் 18 ஆம் பக்கம் பார்க்கவும்







# ஈரான் - இஸ்ரேல் போர்



**செல்வன் விநாயக் பாபு கணேஷ்**

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் மிக முக்கியமான மற்றும் தீவிரமான பிரச்சனைகளில் ஒன்று ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையிலான மோதலாகும். இந்த இரு நாடுகளும் நீண்ட காலமாக ஒருவரையொருவர் எதிர்த்து வந்தாலும், சமீபகாலமாக நிலைமை மிகவும் மோசமடைந்து நேரடிப் போராக மாறியுள்ளது. இது உலக நாடுகள் அனைத்தையும் கவலை அடையச் செய்துள்ளது. இந்த மோதலைப் புரிந்துகொள்ள அதன் வரலாற்றை அறிவது அவசியம். 1979-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை ஈரான் மற்றும் இஸ்ரேல் ஓரளவு நட்புடன் இருந்தன. ஆனால் ஈரானியப் புரட்சிக்குப் பிறகு, அங்கு அமைந்த புதிய அரசு இஸ்ரேலைத் தனது எதிரியாகக் கருதியது. அன்று முதல், இரு நாடுகளுக்கும் இடையே பகை வளர்ந்தது. குறிப்பாக, ஈரானின் அணுசக்தி திட்டம் தங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் என்று இஸ்ரேல் கருதுகிறது.

2025-ஆம் ஆண்டில் இந்த மோதல் நேரடிப் போராக உருவெடுத்தது. ஈரானின் இராணுவத் தளங்களைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இதற்குப் பதிலடியாக ஈரான், ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவியது. 2026-இல் இந்தப் போர் மேலும் விரிவடைந்தது. அமெரிக்கா போன்ற நாடுகள் இதில் தலையிட்டதால், மோதல் இன்னும் தீவிரமானது. ஈரான் தனது ஏவுகணைகளை இஸ்ரேல் மற்றும் அங்குள்ள மற்ற வெளிநாட்டுத் தளங்கள் மீதும் ஏவித் தாக்குதல் நடத்தியது. இந்தப் போரினால் பெரும் உயிர்ச் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, குழந்தைகள் உட்பட பல பொதுமக்கள் இதில் உயிரிழந்துள்ளனர். இது தவிர, உலகளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் பொருளாதார நெருக்கடிகளையும் இந்தப் போர் உருவாக்கியுள்ளது.

இரு நாடுகளும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றன. ஈரான் ஏவும் ஏவுகணைகளைத் தடுக்க இஸ்ரேல் தன்னிடம் உள்ள நவீன பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. இருப்பினும், தொடர்ச்சியான தாக்குதல்களால் பெரும் பாதிப்புகள் தவிர்க்க முடியாததாக உள்ளன.


ஒட்டுமொத்தமாக, ஈரான் - இஸ்ரேல் போர் என்பது மிகவும் சிக்கலான மற்றும் ஆபத்தான சூழ்நிலையாகும். இது வெறும் இரு நாடுகளுக்கு இடையிலான சண்டை மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகத்தையும் பாதிக்கும் ஒரு விஷயமாகும். இந்தப் போர் ஒரு பெரிய உலகப் போராக மாறிவிடுமோ என்ற அச்சம் நிலவினாலும், அமைதி திரும்ப வேண்டும் என்பதே உலக மக்களின் விருப்பமாக உள்ளது.




## விடைகள்

1. ஆர்மோனியப் பெட்டி
2. சுண்ணாம்பு
3. பாம்பு
4. கண், கருவிழி
5. மண்பானை
6. வானம்
7. உப்புக்கல்
8. கைப்பம்பு
9. மிளகாய்
10. நெருப்பு





CYBERSECURITY HEALTHCARE IT

CLOUD COMPUTING BIG DATA

TRANSFORMING ORGANIZATIONS INTO HIGH-PERFORMANCE BUSINESSES » IS OUR COMMITMENT.

BUSINESSINTEGRA

TOGETHER » IT IS DONE


BUILDING HIGH-PERFORMANCE BUSINESS

PRATHIBA RAMADOSS, PRESIDENT & CEO
SELVA JAYARAMAN, EVP & CTO

6550 Rock Spring Drive
Suite 450
Bethesda, MD 20817
Telephone: 301-474-9600
www.businessintegra.com

Inc. 500
CMMI LEVEL 3
Certified ISO 9001:2008
Information Security Management Certified ISO 27001:2013
Certified Service Management Systems ISO 20000:2011

# குழந்தைகளின் ஓவியங்கள்



அக்சதா விஜயானந்த்



கபிலன் தினேஷ் குமார்




தக்ஷன் குமார்



இனியாள் ஆனந்தகுமார்



பிரணிகா



கபிலன் தினேஷ்குமார்



கவின் விஸ்வாஸாரதி



ஹாசினி விஸ்வசாரதி



மிதுன் ஹர்ஷா கர்ணம்



ரியான்



நட்சத்திரா பாலமுருகன்




ருஹான்



வாசுதேவ் ஆனந்தகுமார்




ஜெசிகா வியோ ஆரோக்கியராஜ்



ஷ்ரவன் மணிகண்டன்



அல்தீன் ஷேக் அலாவுதீன்




மோசிகா இராஜேஷ்குமார்



நிறைமதி இராஜேஷ்குமார்




தக்ஷா கணேஷ்



ஸ்வேதா ஜனார்த்தனன்



மீனாட்சி காசி



சம்யுக்தா அஜித்



ஷ்ரவன் மணிகண்டன்

# சொல்விளையாட்டு

## விடைகள்

**ஒன்பதெழுத்துச் சொல்**

விடை: தொலைநோக்குப்பார்வை

**ஏழெழுத்துச் சொல்**

விடை: உதவிக்கரம்




சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்!

**Protax & Accounting Services**

**701, Jackson Road, Silver Spring, MD 20904**

Online Tax Consultation and Preparation services are available.

**Individual • BUSINESS**

**Non-profit Organization**

Please call me at (301) 573 8574 or send an email to peter.yeronimuse@gmail.com

**Peter Yeronimuse M.com., EA., CFE.,**

Enrolled Agent with Internal Revenue Service & Certified Fraud Examiner




# அறிவோம்! தெரிவோம்!



**செல்வி மான்சி சந்திரசேகரன்**

என்னங்க, இந்தத் தென்றல் முல்லை இதழில் எதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம் என ஒரே ஆர்வமா இருப்பீங்க, இதோ உங்களுக்காக..

இதுவரைக்கும் தமிழ் ஆண்டுகளைச் சமஸ்கிருத பெயரில் மட்டுமே அறிந்திருப்பீர்கள்.. நானும் வீட்டில இருக்கிற வருட நாட்காட்டியில் சமஸ்கிருதத்தில் மட் டுமே பார்த்து இருக் கிறேன். அப்போது அம்மாவிடம் கேட்டேன். ஏன் இதுமட்டும் தமிழில் இல்லை? அப்போது அம்மா சொன்னாங்க, "இருக்கும், நமக்குத்தான் தெரியவில்லை". உடனே நான் கூகுள் மாமா கேட்ட போது முகநூலுக்கு இழுத்துச் சென்றது, அதில் படித்துத் தெரிந்து கொண்டது , உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி .. வாங்க அறிந்து தெரிவோம்! படித்துவிட்டு இந்த வருடத்திற்கான தமிழ் வருடத்தை கண்டுபிடிங்க பார்க்கலாம்!

இதோ சமஸ்கிருதத்திற்கு இணையான நம் முன்னோர்கள் வகுத்த அறுபது தமிழ் ஆண்டுகளின் தமிழ்ப்பெயர்கள்.

| | | |
|---|---|---|
| *1. | *பிரபவ | - *நற்றோன்றல்* |
| *2. | *விபவ | - *உயர்தோன்றல்* |
| *3. | *சுக்கில | - *வெள்ளொளி* |
| *4. | *பிரமோதூத | - *பேருவகை* |
| *5. | *பிரசோத்பத்தி | - *மக்கட்செல்வம்* |
| *6. | *ஆங்கீரச | - *அயல்முனி* |
| *7. | *சிறிமுக | - *திருமுகம்* |
| *8. | *பவ | - *தோற்றம்* |
| *9. | *யுவ | - *இளமை* |
| *10. | *தாது | - *மாழை* |
| *11. | *ஈசுவர | - *ஈச்சுரம்* |
| *12. | *வெகுதானிய | - *கூலவளம்* |
| *13. | *பிரமாதி | - *முன்மை* |
| *14. | *விக்ரம | - *நேர்நிரல்* |
| *15. | *விச | - *விளைபயன்* |
| *16. | *சித்திரபானு | - *ஓவியக்கதிர்* |
| *17. | * சுபானு | - *நற்கதிர்* |
| *18. | * தாரண | - *தாங்கெழில்* |
| *19. | * பார்த்திப | - *நிலவரையன்* |
| *20. | * விய | - *விரிமாண்பு* |
| *21. | * சர்வசித்த | - *முற்றறிவு* |
| *22. | * சர்வதாரி | - *முழுநிறைவு* |
| *23. | * விரோதி | - *தீர்பகை* |
| *24. | * விகிர்தி | - *வளமாற்றம்* |
| *25. | * கர | - *செய்நேர்த்தி* |
| *26. | * நந்தன | - *நற்குழவி* |
| *27. | * விசய | - *உயர்வாகை* |
| *28. | * சய | - *வாகை* |
| *29. | * மன்மத | - *காதன்மை* |
| *30. | * துன்முகி | - *வெம்முகம்* |
| *31. | * ஏவிளம்பி | - *பொற்றடை* |
| *32. | * விளம்பி | - *அட்டி* |
| *33. | * விகாரி | - *எழில்மாறல்* |
| *34. | * சார்வரி | - *வீறியெழல்* |
| *35. | * பிலவ | - *கீழறை* |
| *36. | * சுபகிருது | - *நற்செய்கை* |
| *37. | * சோபகிருது | - *மங்கலம்* |
| *38. | * குரோதி | - *பகைக்கேடு* |
| *39. | * #விசுவாவசு | - *#உலகநிறைவு* |
| *40. | * பராபவ | - *அருட்டோற்றம்* |
| *41. | * பிலவங்க | - *நச்சுப்புழை* |



*42. * கீலக - *பிணைவிரகு*

*43. * சவுமிய - *அழகு*

*44. * சாதாரண - *பொதுநிலை*

*45. * விரோதி கிருது - *இகல்வீறு*

*46. * பரிதாபி - *கழிவிரக்கம்*

*47. * பிரமாதீச - *நற்றலைமை*

*48. * ஆனந்த - *பெருமகிழ்ச்சி*

*49. * இராட்சச - *பெருமறம்*

*50. * நள - *தாமரை*

*51. * பீங்கள - *பொன்மை*

*52. * காளயுக்தி - *கருமைவீச்சு*

*53. * சித்தார்த்தி - *முன்னியமுடிதல்*

*54. * ரவுத்ரி - *அழலி*

*55. * துன்மதி - *கொடுமதி*

*56. * துந்துபி - *பேரிகை*

*57. * உருத்ரோத்காரி - *ஒடுங்கி*

*58. * இரக்தாட்சி - *செம்மை*

*59. * குரோதன் - *எதிரேற்றம்*

*60. * அட்சய - *வளங்கலன்*

என்ன அருமையான , அழகான சொற்கள்!

என்னங்க இந்தப் வருடத்திற்கான தமிழ் ஆண்டை கண்டுபிடிச்சிட்டிங்களா??

இவ்வளவு அழகாக இருக்கிற தமிழ் ஆண்டுகளை , இனி தமிழ் நாட்காட்டி வடிவமைப்பவர்களுக்கு இந்த பதிவைக் கொடுத்து இனி மாற்றி எழுத முயற்சி செய்யலாமே! முயலலாம் அனைவரும் ...

நன்றி, அடுத்த இதழில் சந்திக்கலாம்..

அதுவரை உங்களிடமிருந்து விடை பெறுவது உங்கள் மான்சி.

குறிப்பு எடுத்தது : தமிழ்_உலகின்_தொன்மையான_பாரம்பரியம்_கலாச்சாரம்

https://www.facebook.com/share/g/1E4d8JBL7H/

# ஆறு வித்தியாசங்கள்

**செல்வி கீர்த்தனா கணேஷ்**









**விடைகள் 31 ஆம் பக்கம் பார்க்கவும்**



# பாரதியார் தமிழ்ப்பள்ளியின் சிறப்பான பொங்கல் கொண்டாட்டம்

“எத்திசையும் புகழ் மணக்கும் எமது தமிழ்” என்பதற்குச் சான்றே, எங்கள் பொங்கல் கொண்டாட்டம். பொங்கல் விழா படோனியா பள்ளியில், சனவரி மாதம் கோலாகலமாக நடந்தேறியது. நமது தமிழ் மரபுகள், பண்பாடு மற்றும் கலாச்சாரங்களை எவ்வாறு அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வோம் என்ற குழப்பத்தோடு வந்த நம்மை, தோள் கொடுத்துத் தன்னம்பிக்கை தந்த நம் தமிழ்ப் பள்ளிகளுக்கு நன்றி.

வீட்டில் நம் குடும்பத்துடன் நல்ல நிகழ்வுகளுக்குத் தயாராவது போல, மன மகிழ்ச்சியுடன் சென்ற நம்மை மலர்களும், சந்தனமும், கற்கண்டும் மற்றும் புன்னகை கலந்த வரவேற்பும் விழாக் கொண் டாட்டத்திற்கு அழைத்துச் சென்றது. பாரம்பரிய உடை, மேடை அலங்கரிப்பு, குழந்தைகளின் இயற்கையோடு இயைந்த அழகிய ஓவியங்களுடன் கூடிய அரங்க அலங்கரிப்பு என, அனைத்துமே ஒரு கணம் நம்மை நம் ஊருக்கே அழைத்துச் சென்றது.

தமிழ் வர்ணிப்புடன், அறிமுக உரையைத் தொடர்ந்து, கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு வயலின் இசைத்தது மனதை வருடின. கலை நிகழ்ச்சியின் தொடக்கமாக சித்தி விநாயகம் என்ற கர்நாடக இசைப்பாடல் செவிக்கு விருந்தாகியது.

மங்கைகளின் நாட்டிய நடனம் ஆஹா! அருமை! அதுமட்டுமல்லாமல் பரதநாட்டியத்துடன் கூடிய நாட்டுபுற நடனம் இமைக்காமல் இரசிக்க வைத்தது. சின்னச் சின்ன வண்ணக் கிளியாக, மலரும் அரும்புகளின் கண் அசைவுகளுடன் நடனம், மழலைகளின் கை, கால்கள் வெகுளியுடன் தாளமிட, காவடியாட்டம் மனதை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.



திருமதி சத்யா பாபு

“கல்வியே மனித வாழ்வின் ஆயுதம்” என வீரத்துடனும், விவேகத்துடனும் மாணவன் ஆற்றிய உரை மெய் சிலிர்க்க வைத்தது. தமிழ் மெல்லிசைப் பாடல்களுக்கு, இளஞ் சிறுவர்கள் மற்றும் இளஞ்சிறுமிகள் ஒரே வண்ண உடையில் ஆடிய நடனத்திற்கு, நம் கை கால்களும் தாளம் தட்டியது. கவின்மிகு புன்னகையுடன் தனித்தும் நடனமாடி அசத்தினர். பின்னணி இசையில் குழுப்பாடல்கள், மாணவிகள்





மட்டுமின்றி பெற்றோர்களும் பாடியது ஆர்வமாக இருந்தது.

சிறப்பு விருந்தினர் திருமதி கவிதா சுப்பிரமணியம் அவர்களுக்கு, பாரதியார் தமிழ்ப் பள்ளி சார்பாக பூங்கொத்து கொடுத்து,பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். சிறப்பு விருந்தினரின் உரை, பெற்றோர் மற்றும் ஆசிரியர் களுக்கான கடமைகள் பற்றியதாகவும், பாராட்டுதலுடனும் இருந்தது. மேலும் இருமொழி முத்திரைத்தாள் தேர்வுகளின் பலனைப் பற்றி பகிர்ந்தது அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது.

தென்றல் முல்லை இதழைப் பற்றிய சிறப்புகள், நம் படைப்புகளைப் பதிவிடும் தளம் பற்றிய ஊக்க உரைகளை ஆசிரியர்கள் வழங்கினார்கள்.

மனதை இளமையாக வைத்திருக்கும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுமாகிய அழகிய தமிழ் மகன்களின் நடனம், அழகிய தமிழ் மகள்களின் நடனம் என பொங்கல் கொண்டாட்டத்தை இரட்டிப்பாக்கினார்கள்.

வயலின் குழு, விசைப்பலகை, புல்லாங்குழல் இசையென இசை மழை பொழிந்து மனதை நனைத்தனர். விருந்தோம்பலால் மனதும், வயிறும் நிறைந்தது.

சிந்தனையையும் சிரிப்பையும் கூட்ட வினாடி வினா, பெரியவர்களுக்கான விளையாட்டுகள் என விழா சுவாரசியமாகச் சென்றது. உணர்ச்சி மிக்க, எழுச்சி மிகுந்த பறையிசையை நடனத்துடன் பறைக் குழுவினர் அரங்கேற்றியது அனைவரையும் ஆட்டம் போட வைத்தது. பறைக் குழுவினரின் சேவை மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம். பல்வேறு போட்டிகளில் பங்கேற்ற மாணவ மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் அளித்து ஊக்குவித்தனர்.

ஒரு நிகழ்ச்சி நல்லமுறையில், அனைவரும் மகிழ்ச்சியுற கொண்டாடப் பட விழாவிற்கு முதுக்கெலும்பாக இருந்த அனைத்து தன்னார்வலர்களின் மனது, விசாலம்! செயல், உயிரோட்டம்! அர்ப்பணிப்பு, அறம்!. நம்பிக்கை, உழைப்பு, முயற்சி, ஒருங்கிணைந்த ஒற்றுமை கண்ட பலனே வெற்றி பெற்ற கொண்டாட்டம். மீண்டும் ஒரு கொண்டாட்டதில் மகிழ்ச்சியுடன் இணைவோம்! தமிழர்களாய் பெருமிதம் கொள்வோம்!









# மேரிலாண்ட் தமிழ்க் கல்விக்கழகத்தின் கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் 2026

**தொகுப்பு: திருமதி சரண்யா பிரபு, திருமதி சரண்யா நடராஜன், மற்றும் திருமதி நாராயணி வள்ளிக்கண்ணு**

சங்க காலத்தில் நம் வண்டமிழை சங்கம் வைத்து வளர்த்த நம் மூதாதையர்களின் வழி மாறாமல் இன்றும் அதன் வாசம் குறையாமல் வளர்த்து வருகிறோம். அதற்கு ஒரு சான்றாக, எங்கள் மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகம் தமிழ் கலை இலக்கியப் போட்டிகள் கடந்த பிப்ரவரி மாதம் 27 மற்றும் 28 ஆம் தேதி சிறப்பாக நடைபெற்று முடிந்தது. எம் தமிழ்ப் பள்ளியின் பெற்றோர்களாகவும், ஆசிரியர்களாகவும், நாங்கள் மூவரும் இப்போட்டி நாளின் நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறோம்.

தமிழ் மொழியின் பெருமையை அடுத்த தலை முறைக்குக் கொண்டு செல்லும் பாலமாகத் திகழ்வது பள்ளிகளில் நடைபெறும் கலை மற்றும் இலக்கியப் போட்டிகள் ஆகும். மாணவர்களின் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், தாய்மொழியின் மீதான பற்றை வளர்க்கவும் இத்தகைய போட்டிகள் ஒரு சிறந்த களம் அமைத்துக் கொடுக்கின்றன.

இவ்விழா இரண்டு நாட்களாக நடைபெற்றது. முதல் நாள் சொல்லெழுத்துப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் எழுத்துப் போட்டியாகிய கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன.

இந்த ஆண்டு புதிய போட்டியாக சொல்லெழுத்துப் போட்டி நடைபெற்றது. நிலை 4 முதல் நிலை 10 வரை உள்ள மாணவர்கள் இதில் பங்கேற்றனர். ஐந்து சுற்றுகளாக நடைபெற்ற இந்தப் போட்டியில், அனைத்து மாணவர்களும் மிகச் சிறப்பாக பயிற்சி செய்திருந்தனர். இந்தப் போட்டி குழந்தைகளின் சொற்களஞ்சியத்தையும் சரியான எழுத்துத் திறனையும் மேம்படுத்தும் விதமாக அமைக் கப்பட்டது, அவர்களுக்கு பயிற்சி மற்றும் சவாலின் வாய்ப்பாகவும் இருந்தது. அதற்கு அடுத்து நடந்த ஓவியப் போட்டியில் மடைதிறந்த வெள்ளம் போல்







திரளாக வந்து கலந்து கொண்டனர். பிள்ளைகள் தங்கள் கற்பனைக் கைவண்ணத்தை வெளிப்படுத்தி நெகிழ்ந்தார்கள். முதல் நாள் போட்டியின் நிறைவாக கட்டுரைப் போட்டி நடைபெற்றது.

இரண்டாம் நாள் அன்று அலங்கரிக்கப்பட்ட அரங்கிற்கு வருகை தந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என அனைவரையும் வரவேற்று தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சி துவங்கியது.

எங்கள் தமிழ்ப் பள்ளியின் முத்தமிழ் விழாவாகிய கலை இலக்கியப் போட்டிகளில், முதலில் சரவெடியாக ஆரம்பித்தது திருக்குறள் ஒப்புவித்தல் மற்றும் திருக்குறளும் பொருளும் போட்டியில் படபடவென ஒலிக்கும் பட்டாசு போல் குழந்தைகள் தங்கள் பாணியில் ஒப்பித்தார்கள்.

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற பழமொழிக்கேற்ப, மாணவர்கள் தங்கள் பேச்சுத் திறமைகளை வெளிப்படுத்தினர். "நான் போற்றும் தமிழ் நாட்டுத் தலைவர்","பெண் சுதந்திரத்தின் அடையாளம்", "பிச்சை புகினும் கற்கை நன்றே" போன்ற பல தலைப்புகளில் தைரியமாகப் பேசிய அவர்கள் நடுவர்களையும் பார்வையாளர் களையும் கவர்ந்து, அவர்களிடமிருந்து பாராட்டு களையும் கைத்தட்டல்களையும் பெற்றனர்.

பாட்டுப்பாடாவா என்ற இசைப் போட்டியில் "இசைத்தமிழாகிய அமுதத்தமிழில்" தங்களின் இன்னிசைப் பாடல்களை குழந்தைகள் அவர்களின் குயில் குரலில் உற்சாகத்துடன் பாடி மகிழ்ந்தார்கள்.. பார்வையாளர்களும் அமுது இசைத்தமிழை பிள்ளைகள் பாடக் கேட்டு மகிழ்ந்து ஆர்ப்பரித்து தங்கள் கரகோஷங்களை எழுப்பினர். மழலை மொழி யில் இசை கலந்து வரும் போது தமிழ் பேரழகாக மலர்கிறது. அந்தப் பேரழகை தமிழ் மரபு சார்ந்த பாடல்கள், சமூக அக்கறைப் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் போன்ற பல தலைப்புகளில் பாடி, தமிழின் இனிமையையும் இசைத் திறனையும் வளர்க்கும் சிறந்த மேடையாக பாட்டுப்பாடாவா நிகழ்வு விளங்கியது.

சங்க காலம் முதல் புலவர்கள் கூடி விவாதிக்கும் அவையே பட்டிமன்றமாகும். தமிழ் பட்டிமன்றப் போட்டி, மாணவர்களின் கருத்துப் பரிமாற்றம், வாத நயம் மற்றும் அவர்களின் குழு செயல்திறனை வெளிப்படுத்திய சிறப்பான போட்டியாக அமைந்தது. போட்டியாளர்கள் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் விவாதித்து, தங்கள் கருத்துகளை நகைச்சுவையுடன் வெளிப்படுத்தினர். இப்போட்டியின் மூலம் அணிப் பண்பும் ஒற்றுமையும் எப்படி செயல்படுகிறது என்பதை அனுபவமாக உணர்ந்தனர்.

தமிழர்களின் பாரம்பரிய வியூக விளையாட்டான ஆடு புலி போட்டி சிறப்பாக நடைபெற்றது. 3 புலிகள் மற்றும் 15 ஆடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த விளையாட்டில், ஆடுகள் புலிகளைச் சூழ்ந்து முடக்க முயலவும், புலிகள் ஆடுகளை வேட்டையாட முயலவும் செய்கின்றன. மாணவர்கள் மிகுந்த கவனம், சிந்தனைத் திறன் மற்றும் திட்டமிடும் திறனை வெளிப்படுத்தி விளையாடினர்.

ஐந்து கல், பாண்டி, உறியடி ஆகிய பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் குழந்தைகளிடையே உற்சாகத்தை வெளிப்படுத்தியது.

பிளாஸ்டிக் பாட்டில்களை குறைக்க, பள்ளி "Go Green" முயற்சியை முன்னெடுத்து வருகிறது.

மாணவர்கள்/பெற்றோர்கள் தங்கள் தண்ணீர் பாட்டில்களைக் கொண்டு வந்து நிரப்பிக் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

காலை மற்றும் மாலை நேர சிற்றுண்டிகளுக்கும், மதிய உணவிற்கும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.காலை முதல் மாலை வரை போட்டிகளில் பங்கேற்ற அனைத்து நிலை மாணவர்களின் பங்களிப்பைப் பாராட்டும் விதமாக, அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர். போட்டி ஒருங்கிணைப்











பாளர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டது.

மாணவர்களின் திறமைகளை கண்டுகளித்து, வெற்றியாளர்களையும் தேர்ந்தெடுக்க உதவிய நடுவர்களின் சிறந்த பணியைப் பெரிதும் மதித்து, அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி, நன்றியைத் தெரிவித்து மகிழ்ந்தோம்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், மேடைத் தொகுப்பாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் மேடை அலங்கரிப்பாளர்கள், ஒலிபெருக்கிக் கலைஞர்கள் மற்றும் அனைத்து தன்னார்வ தொண்டாளர்கள் அனைவரின் சேவையை நினைவு கூர்ந்து நன்றி பாராட்டுகிறோம்!

தங்களின் பிள்ளைகளின் தனித்திறனை வெளி உலகிற்குக் கொண்டு வர உழைத்த அத்துணை பெற்றோர்களுக்கும் நன்றிகளும்,வாழ்த்துகளும்!

ஒவ்வொரு ஆண்டும் இப்போட்டிகளுக்கான அறிவிப்புகள், திட்டமிடல், தலைப்புகள் மற்றும் விதிகள் வரையறுத்தல் முதல், போட்டி நாளுக்கான நேர அட்டவணையைச் செம்மையாக வகுத்தளித்தல் வரை, தன்னலமின்றி அனைத்து பொறுப்புகளையும் சிறப்பாக நிறைவேற்றி வரும் எம் பள்ளி நிர்வாகக் குழுவினருக்கு வாழ்த்துகள்! “தமக்கென வாழார்; பிறர்க்கென உழைப்பார்” என்ற புறநானூற்றுப் பாடல் வரி நினைவிற்கு வருகிறது!

தீந்தமிழால் இணைவோம்! தேந்தமிழ் மொழியை மேன்மேலும் வளர்ப்போம்!!

“வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! நற்றமிழ் வெல்லும்!

KALPASI
INDIAN CUISINE
FLAVORS OF CHETTINAD



# இத்தருணம்

ஜன்னல் திறந்து காத்திருந்தேன் காற்று வருமென...
வந்தது காதல் இயற்கையின் மேல்.

கணினி  திறந்து காத்திருந்தேன் இணையம் கிடைக்குமென...
கிடைத்தது நேரம் உறவுகளுடன் உரையாட.

கண்கள் மூடிக் காத்திருந்தேன் கனவு வருமென...
வந்தது கவிதை உறக்கம் கெடுக்க.

மரங்கள் வளர்த்துக் காத்திருந்தேன் கனிகள் கிடைக்குமென...
கிடைத்தது இருப்பிடம் காக்கைக்கும், குருவிக்கும்.

இயன்ற உதவிகள் செய்தேன் சொர்க்கத்தில் இடம் கிடைக்குமென...
கிடைத்தது மனநிறைவு வாழும்போதே.

இனிப்புகள் வாங்கி வைத்தேன் சுவைப்பதற்கு...
சுவைத்தன அணிவகுத்து வந்த எறும்புகள் எனைக்காக்க.

நாம் விண்மீன்கள் பிடிக்க முயல்கையில்...
சில மின்மினிப் பூச்சிகள் நம் தோள்களை உரசிதான் செல்கின்றன.
உ ண ர் ந் தி ரு ப் பே ா ம்
இத்தருணத்தை.

**முனைவர்
திருவாய்மொழி
அபிமன்னன்**



# ஆறு வித்தியாசங்கள்

## விடைகள்



# பெண்மை... பெருமை....



தமிழ் இலக்கிய உலகில் புதிய சிந்தனைகள், உணர்ச்சிகள் மற்றும் சமூகப் பார்வைகளை வெளிப்படுத்தும் எழுத்தாளர்களில் ஒருவர் ஓவியா. இவருடைய எழுத்துநடை எளிமையும் ஆழமும் கொண்டதாக இருக்கும். வாசகர்களின் மனதில் நீண்டநேரம் பதியும் வகையில் அவர் கதைகளையும் கட்டுரைகளையும் உருவாக்குகிறார்.

ஓவியாவின் படைப்புகளில் மனித உணர்வுகள் முக்கிய இடம் பெறுகின்றன. குடும்ப உறவுகள், பெண்களின் நிலை, சமூக மாற்றங்கள் போன்ற பல்வேறு தலைப்புகளை அவர் தனது எழுத்தில் எடுத்துரைக்கிறார். குறிப்பாக பெண்களின் சுயமரியாதை, கல்வியின் முக்கியத்துவம் மற்றும் சமத்துவம் போன்ற கருத்துகள் அவரது கதைகளில் வெளிப்படையாகக் காணப்படுகின்றன.

ஓவியா அவர்கள் தனது தாத்தா மற்றும் பாட்டியை முன்னுதாரணமாக எடுத்து வாழ்ந்தவர். அவரது தாத்தா சுய மரியாதைக் கட்சியைச் சார்ந்தவர். அவர் தாத்தா சாதி மறுப்புத் திருமணம் செய்தவர். அவர் மூட நம்பிக்கை மறுப்பாளர், பெண் பிள்ளைகளைத் துணிவாக வளர்க்க ஊக்கமளிப்பவர். இவரது குடும்பம் சடங்குகள், பண்டிகைகள், திருவிழாக்கள் அனைத்தும் சாதி மதம் சார்ந்து இருந்த காரணத்தினால் அவற்றைப் புறக்கணித்தது மற்றும் கடவுள் வழிபாடு மறுப்பு, ஆடம்பர மறுப்புக் கொள்கைகளைக் கொண்ட கருப்புச் சட்டைக்காரர் குடும்பமாக இருந்தது.

இவரது படைப்புகளில் பிரபலமானது “பெண்ணும் ஆணும் ஒன்னு” எனும் நூல். ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரியானவர்கள் எனும் இயற்கைக்கு மாறான கருத்தைத் தோழர் ஓவியா நூலில் வெளிப்படுத்தவில்லை, மாறாக இருவரும் வேறு வேறானவர்கள், ஆனால் சமமானவர்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதே நூலின் நோக்கமாக உள்ளது. சமமாக இருப்பது வேறு, ஒரே மாதிரியாக இருப்பது வேறு என்கிறார் அவர்.

இவரது மற்ற படைப்புகள் ‘அமெரிக்காவிற்குப் போன சாதி’, ‘கருஞ்சட்டை பெண்கள்’ மற்றும் ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’. அவரது எழுத்துநடை மிக எளிமையான தமிழில் இருந்தாலும், அதில் உள்ள கருத்துகள் மிகவும் ஆழமானவை. வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுவது அவரது சிறப்பாகும். இதனால் மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அவரது படைப்புகளை இரசிக்கின்றனர்.

மேலும், ஓவியா சமகால சமூகப் பிரச்சினைகளைத் தனது கதைகளில் நுணுக்கமாக பின்னிப் பொருத்துகிறார். இதனால் வாசகர்கள் சிந்திக்கவும் மாற்றத்தை நோக்கிச் செல்லவும் ஊக்கமளிக்கிறார். அவரது எழுத்து வெறும் பொழுதுபோக்கு அல்ல; அது ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருவியாகவும் செயல்படுகிறது.

மொத்தத்தில், தமிழ் இலக்கியத்தில் தனித்துவமான குரலாக உருவெடுத்து வரும் ஓவியா, தனது படைப்புகள் மூலம் வாசகர்களின் மனதில் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளார். எதிர்காலத்தில் மேலும் பல சிறந்த படைப்புகளை வழங்குவார் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உள்ளது.



**திருமதி இரஹீமா அலாவுதீன்**

# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின்
# சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்

வணக்கம்! நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் சார்பாக ‘சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்’ என்ற தலைப்பில் இலக்கியத் தொடர் சிறப்பு நிகழ்வுகள் இணைய வழியில் நடைபெற்று வருவதைக் கடந்த இதழில் பார்த்தோம்.



திருமதி. புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

இதில் பல தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டுநம்இலக்கியத்தொன்மையையும் பெருமையையும் பற்றி நம் செவிகளுக்கு விருந்தளிக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து கடந்த சனவரி மாதம் பதினொன்றாம் தேதி அன்று ‘காதல் நாடகக் கலித்தொகை காற்றில் கலந்த வடதிசையும்’ என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. இராம. குருநாதன், (எம். ஏ. பி. எச். டி. மேன், மேனாள் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை) கலித்தொகை பற்றிய அழகான கருத்தை நமக்கு சிறப்புரை ஆற்றினார். அதைத் தொடர்ந்து கடந்த பிப்ரவரி பதினைந்தாம் தேதி ‘ஐங்குறுநூறு ஓர் அறிமுகம்’ என்ற தலைப்பில் பேராசிரியர் திருமதி நித்யகல்யாணி பால் கனகராஜ் அவர்கள் அன்பின் ஐந்திணையை எளிய சொற்களில், சுருக்கமான அடிகளில் விளக்கும் சிறந்த நூலாக விளங்கும் ஐங்குறுநூறு நூலின் சிறப்பை நமக்கு அழகாக எடுத்துரைத்தார்.

எட்டுத்தொகை நூல்களில் அடங்கிய கலித்தொகை மற்றும் ஐங்குறுநூறு சங்ககால தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்பதற்கு இத்தொகை நூல்களே சான்றாக அமைகிறது. இத்தகைய சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் மூலம் நம் சங்க இலக்கியத்தின் பெருமையும் அதன் அர்த்தங்களையும் நாம் அறிய நமக்கு மிகவும் உறுதுணையாக அமைகிறது. இது நம் அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற சிறப்பான வாய்ப்பு. எனவே அதனை நாம் பயன்படுத்திக் கொள்வோம். இனியும் தொடர்ச்சியாக நடைபெற இருக்கும் இத்தகைய சொற்பொழிவுகளில் நாம் கலந்து கொண்டு நம் இலக்கியத்தின் சிறப்பை அறிவோம். நன்றி, வணக்கம்!



# தோழர் ஷோபா சக்தி அவர்களின் "வாழ்க"



இலக்கியங்கள் நம் மனதிற்குள் கட்டமைக்கப் பட்டிருக்கும் பல மாய பிம்பங்களை நொறுக்கும் வல்லமை உடையவை. அரசாங்கமும், ஊடகங்களும் தங்களுடைய பிரச்சாரத்தின் வழியாக ஒரு வகையான பிம்பத்தைக் கட்டமைத்து அதை உண்மையென தற்காலிகமாக நிறுவி இருப்பினும், ஒரு உண்மை ஒளி பாய்ச்சும் இலக்கியத்தின் முன்னேயும், ஓயாத தேடல் கொண்ட வாசகன் முன்னேயும் பிரச்சாரம் நிர்வாணமாகும்.

அன்பு வாசகர்களே, எழுத்தாளர் தோழர் ஷோபா சக்தி அவர்களின் 'கண்டி வீரன்' கதைத் தொகுப்பைப் படித்து முடித்தபோது அப்படிப்பட்ட அனுபவம் எனக்குள் ஏற்பட்டது. இந்தத் தொகுப்பின் அட்டைப் பகுதியில் உள்ள வாசகத்தில் சொல்வதானால் "ஆன்மாவைப் பறித்துக் கொண்டு அம்மணத்தை பரிசளித்த இயக்கப் பெருமிதங்களைக் குலைத்த ரூபங்கள்" "தோழர் ஷோபா சக்தி அவர்களின் கதைகள். அவை தேச, தேசிய, சாதி, போலி ஜனநாயக உணர்வுகளை விட்டு விலகிப் பயணிப்பவை.

அல்லைப்பிட்டி (*Allaipiddy*) என்பது இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்கே, வேலணைத்தீவில் அமைந்துள்ள ஒரு அழகான கிராமம் ஆகும்.

வேலணை, சேயோனின் வேலன் எனும் பெயரை நாதமாய்க் கொண்ட தீவு.

கள்ள மௌனம் இன்றல்ல என்றுமே போலி ஜனநாயகப் பேரரசுகளுக்கு ஒரு வரம். 1990 ஆம் ஆண்டு உலகம் கள்ள மௌனத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில் 85 இளைஞர்கள் கொல்லப்பட்ட நாளில், தன் உறவினர்கள் 23 பேரை இழந்தவர், அல்லைப்பிட்டி கிராமத்தின் மைந்தர் தோழர் ஷோபா சக்தி.

அவர் வாழ்வில் பல போராட்டங்களை, அகதி வாழ்வைக் கடந்து வந்திருப்பினும் கதைகளில் ஆதிக்க சக்திகளை விமர்சிக்கும் அளவிற்கு, தமிழ் இனக் குழுக்களின் தவறுகளையும் சுட்டிக்காட்டுவது, ஒரு புதிய பார்வையை வாசகர்களுக்கு அளிக்கிறது.

அவருடைய சிறுகதைத் தொகுப்பில் இருந்து 'வாழ்க' என்ற சிறுகதையை இந்த இதழில் பகிர்கின்றேன். பாரிஸில் 2014 -15 ஆண்டு காலகட்டத்தில் நடைபெறும் மே தின ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் ஒரு தமிழரின் பார்வையில் இக்கதை தொடங்குகிறது. இருபது ஆண்டுகாலமாகத் தொடர்ந்து மேதின ஊர்வலங்களில் கலந்துகொள்ளும் கதைசொல்லி, அங்குள்ள பல்வேறு நாட்டு மக்கள்



**யாழ்ப்பாணம் வேலணை வங்களாவடி முருகன் கோயில்**

மற்றும் அரசியல் குழுக்களின் பன்முகத்தன்மையை விவரிக்கிறார். இலங்கையில் தமிழீழ இயக்கம் செல்வாக்குடன் இருந்த காலத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான ஊர்வலங்களையும், தற்போது தமிழர்கள் பல்வேறு சிறு குழுக்களாகப் பிரிந்து நின்று ஊர்வலம் நடத்துவதையும் அவர் ஒப்பிடுகிறார். எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்துத் தமிழ்க் குழுக்களின் ஊர்வலத்திலும் பங்கெடுக்கும் அவர், ‘ஜனநாயகம் வாழ்க’ என்ற பதாகையை ஏந்தி நடக்கிறார்.



**திரு. கமலபாரதி பச்சியப்பன்**

கதைசொல்லியின் கடந்தகால நினைவுகள் இலங்கையில் அவர் சந்தித்த சாதியக் கொடுமைகளையும் சமூகப் போராட்டங்களையும் பேசுகின்றன. ஊரில் தலித் மக்கள் ஒன்றிணைந்து இறப்பு வீடுகளில் பறையடிப்பதில்லை என்று முடிவெடுத்து, மேளங்களை எரித்துப் போராடுகிறார்கள். இதனால் ஆத்திரமடைந்த ஆதிக்க சாதியினர் அவர்களுக்கு வேலை மறுத்து, பொருளாதாரத் தடை விதிக்கின்றனர். இக்கட்டான சூழலில் குடும்பத்தைக் காக்க அண்ணன்மார் சவூதி சென்று பணம் அனுப்பியதால் குடும்பம் நிமிர்கிறது. சாதியப் பகை மறைமுகமாகத் தொடர்ந்தாலும், கதைசொல்லி மாணவர் பருவத்தில் அரசியல் இயக்கங்களின் ஊர்வலங்களில் கலந்து கொள்வதன்மூலம் ஒருவிதக் கூட்டு வலிமையையும் விடுதலையையும் உணர்கிறார்.

அதன் பின் உள்நாட்டுப் போர் காரணமாக ஜெர்மனிக்கு அகதியாக கதைசொல்லி புலம் பெயர்கிறார். ஜெர்மனியில் வசிக்கும்பொழுது மே தின ஊர்வலத்தில் பங்கேற்க பாரிஸ் செல்கிறார். அங்கு இருக்கும் பொடியன் சரியாகப் பறை அடிக்காமல் போக, கதைசொல்லி அவனிடம் இருந்து வாங்கி அடிக்க, மிகப் பிரபலமாக ஆகிறார். அந்த ஊர்வலத்தில் வரும் நிரஞ்சினி என்ற பெண் மற்ற ஊர்வலங்களிலும் பார்த்துப் பழகி இருவரும் காதலர்கள் ஆகிறார்கள்.

நிரஞ்சினி ஒரு வசதியான தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவள். இவர்களது காதல் நிரஞ்சினியின் பெற்றோருக்குத் தெரிந்ததும், சாதி மற்றும் அந்தஸ்து காரணமாக அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நிரஞ்சினியின் தந்தை கதைசொல்லியை நேரில் வந்து தாக்குகிறார்; நிரஞ்சினியை வீட்டை விட்டு வெளியேற விடாமல் சித்திரவதை செய்கின்றனர். ஒருகட்டத்தில் நிரஞ்சினி காணாமல் போகிறாள். அவளது தந்தை முதலில் கதைசொல்லி தான் அவளைக் கடத்தி வைத்திருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்.

கதையின் இறுதியில் வெளிப்படும் உண்மை மிகவும் ஆழமான கேள்வியை எழுப்புகிறது . பிராங்பேர்ட் அருகில் ஒரு காட்டுப்பகுதியில் நிரஞ்சினியின் சாம்பலும் எலும்புத் துண்டுகளும் கண்டெடுக்கப்படுகின்றன. அந்தச் சமயத்தில் ஜெர்மனியில் வெளிநாட்டினருக்கு எதிராக ‘நியோ-நாசி’ (Neo-Nazi) குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டு வந்ததால், இது ஒரு இனவெறித் தாக்குதல் என்று தமிழ் ஊடகங்கள் எழுதுகின்றன.

ஆனால், உண்மையில் தனது குடும்ப கௌரவத்தைக் காக்க நிரஞ்சினியின் பெற்றோர் (தாயும் தந்தையும்) திட்டமிட்டு அவளைக் கொன்று காட்டில் எரித்துள்ளனர் என்பது பின்னர் தெரியவருகிறது. காதலித்தவளைச் சாதியின் பெயரால் கொன்ற பெற்றோரே, அஞ்சலி செலுத்துவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்ச் சமூகத்தின் போலித்தனமான கௌரவத்தையும் சாதிய வன்மத்தையும் இக்கதை மிகக் கூர்மையாக விமர்சிக்கிறது. கதையின் கடைசி மூன்று பத்தி இவ்வாறு முடிகிறது - “கடைசியில, நிரஞ்சினியைக் கொலை செய்தது யார் என்பதைப் போலீஸ் கண்டுபிடிச்சுது. நிரஞ்சினியின் உடம்ப காட்டுக்குள்ள வச்சு சைவ சமயக் கிரியைகளைச் செய்து சைவ முறைப்படிதான் எரிச்சிருக்கிறாங்கள். அதை வைச்சுதான் குற்றவாளிகள கண்டுபிடிச்சாங்கள்.

நிரஞ்சினியின் கொலைக் கேஸில நான்தான் முக்கியமான சாட்சி. கன ஜெர்மனிப் பேப்பர்கள் இந்தக் கொலை பற்றி எழுதிச்சு. ஆனால், மகள் சாதி மாறிக் காதலிச்சதால தகப்பனும் தாயும் அடிச்சதால படாத இடத்தில பட்டு மகள் செத்துப்போக, தகப்பனும் தாயுமா மகளின் உடம்பைக் கொண்டுபோய் காட்டுக்குள்ள போட்டு எரித்தார்களென்று ஒரு தமிழ்ப் பேப்பரும் நியூஸ் எழுதவுமில்ல, ஒரு தமிழ் ரேடியோ செய்தியும் சொல்லவுமில்ல. கன தமிழ்ச் சனம் நாஸிகள்தான் நிரஞ்சினியை எரிச்சதா இப்பயும் நினைச்சுக் கொண்டிருப்பினம்.

ஆனால் உண்மையில அந்தப் பேப்பருகளையும் ரேடியோவையும் குறைசொல்லுறதால என்ன வரப்போகுது. அதைப் பற்றிக் கதைச்சு ஆருக்கு என்ன லாபம். ஆரையும் அழிய ஒழிய எண்டு முனியிறதால நிரஞ்சினிதான் சாம்பலிலயிருந்து உயிர்த்து வரப்போறாளா?

ஒண்டு மட்டும் சொல்லலாம்... ஜனநாயகம் வாழ்க!

இதுக்குள்ள நாஸிப் பிரச்சினை, அகதிப் பிரச்சினை, தலைமுறைப் பிரச்சினை, இனப் பிரச்சினை, சாதிப் பிரச்சினை எல்லாம் அடங்குதுதானே”

கதையை முழுமையாகப் படிக்க விரும்புவர்களுக்கு சுட்டி -

*https://www.shobasakthi.com/shobasakthi/2014/09/24/%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%95/*




# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின்

# 2025 பிக்கள்பால் போட்டி

## ஒரு விரிவான அறிக்கை

**தொடக்கமும் தலைமையேற்பும்:**

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் (TSGW) 2025ஆம் ஆண்டிற்கான தனது முதல் பிக்கள்பால் (Pickleball) போட்டியை ஒரு வரலாற்றுச் சாதனையாக நிகழ்த்திக் காட்டியுள்ளது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் (TSGW) வரலாற்றில், விளையாட்டு மற்றும் சமூக ஒன்றிணைப்பிற்கான ஒரு புதிய அத்தியாயம் 2025ஆம் ஆண்டு செயற்குழுவின் தொலைநோக்குப் பார்வையால் தொடங்கப்பட்டது. கடந்த காலங்களில் வாலிபால் மற்றும் டென்னிஸ் போன்ற போட்டிகளைத் திட்டமிட்டு வெற்றிகரமாக நடத்திய தமிழ்ச்சங்கத்தின் அனுபவத்தையும் உத்வேகத்தையும் அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆண்டு ‘பிக்கள்பால்’ (Pickleball) எனும் புதிய முயற்சியை சங்கம் கையில் எடுத்தது.



திரு. வெங்கட்ரமணன் கிருஷ்ணசாமி

**ஒருங்கிணைந்த திட்டமிடலும் சங்கத்தின் உழைப்பும்:**

இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்ல, அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களின் வழிகாட்டுதல் சங்கத்திற்குப் பெரும் பலமாக அமைந்தது. குறிப்பாக, சங்கத்தின் தலைவர் திரு. செந்தில்குமார் மலைக்கொழுந்து அவர்களின் தலைமையிலான செயற்குழு, இப்போட்டியை ஒரு நல்ல தரத்துடனும் ஆக்கத்துடனும் நடத்தத் தீர்மானித்தது. இதற்கான தொடக்கப் பணிகளில், சங்கத்தின் செயலாளர் திரு. அறிவுடைநம்பி புகழேந்தி அவர்கள் முந்தைய விளையாட்டுப் போட்டிகளில், தான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு செயல்படுத்தி ஒரு வலுவான அடித்தளத்தை அமைக்க முற்பட்டார். இந்நிகழ்வில் நமது சங்கத்தின்

பொருளாளர் திருமதி காமேஷ்வரி சந்திரசேகர் அவரது துணைவர் திரு. பிரதீப் மற்றும் நமது சங்கத்தின் இயக்குநர் திரு. பிரகாஷ் மாதேஷ் அவர்கள் கலந்து கொண்டு தங்களது அளப்பரிய பங்களிப்பினைத் தந்தனர்.

### தளவாடப் பணிகளும் உள்கட்டமைப்பும்:

ஒரு விளையாட்டுப் போட்டி சிறப்பாக அமைவதற்கு மைதானம் மற்றும் அடிப்படை வசதிகள் மிக முக்கியம். இதனை உணர்ந்து, மேரிலாந்தின் நார்த் பெதெஸ்டாவில் உள்ள அதிநவீன 'Dill Dinkers' விளையாட்டு வளாகத்தை சங்கம் தேர்வு செய்தது. மைதானத் தேர்வு (Venue Locking) முதல் போக்குவரத்து மற்றும் இதர வசதிகள் (Logistics) வரை அனைத்துப் பணிகளையும் எவ்விதக் குறையுமின்றி நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது.

### தொழில்நுட்பமும் தன்னார்வலர் வலுவும்:

தமிழ்ச்சங்கத்தின் தன்னார்வலர் திரு. வெங்கட் அவர்கள், சங்கத்தின் இந்த முயற்சிக்குத் தொழில்நுட்பம் சார்ந்து பெரும் பங்களிப்பை வழங்கினார். பங்குபெறும் வீரர்களின் பதிவு மற்றும் போட்டித் தகவல்களைத் துல்லியமாக நிர்வகிக்க ஒரு பிரத்யேக இணையதளத்தை (Web Portal) உருவாக்கி, போட்டிக்கு ஒரு தொழில்முறைத் தோற்றத்தை அளித்தார். திரு. அறிவுடைநம்பி மற்றும் திரு. வெங்கட் ஆகியோரின் இந்த ஒருங்கிணைந்த பணி, இப்போட்டியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றது.

ஒட்டுமொத்தமாக, TSGW-வின் இக்கூட்டு முயற்சி மற்றும் தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பு, இந்த பிக்கள்பால் போட்டி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக மாற்றியுள்ளது. குறிப்பாகத் தன்னார்வலர்கள் திரு. சந்திரசேகர், திருமதி மீனா மற்றும் திருமதி இரம்யா இருவரும் போட்டிகளின் புள்ளிகளைச் சேகரித்து ஒருங்கிணைத்து பேருதவியினை நமக்களித்தனர்.

### போட்டி அமைப்பு மற்றும் பங்கேற்பு:

வீரர்களின் திறமை மற்றும் தரவரிசைக்கு மதிப்பளிக்கும் வகையில் Round-Robin முறையில் போட்டிகள் அமைக்கப்பட்டன.

இதில் சுமார் 76 வீரர்கள், 38 அணிகளாகப் பங்கேற்றனர்.

- ஆண்கள் இரட்டையர்: 24 அணிகள் பங்கேற்று தங்கள் பலப்பரிட்சையை நிகழ்த்தின.
- கலப்பு இரட்டையர்: 10 அணிகள் பங்கேற்று போட்டியின் சுவாரஸ்யத்தைக் கூட்டின.
- ஜூனியர் இரட்டையர்: 4 அணிகளில் பங்கேற்ற இளம் வீரர்களின் ஆட்டம், சங்கத்தின் விளையாட்டுப் பாரம்பரியம் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுவதை உறுதி செய்தது.

### வெற்றியாளர்கள் கௌரவிப்பு:

அனைத்துத் தரப்பு வீரர்களும் உற்சாகத்துடன் பங்கேற்ற இந்த விளையாட்டு, விழாவின் இறுதியில், வெற்றியாளர்களுக்கு உரிய அங்கீகாரமும் பரிசுகளும் வழங்கப்பட்டன. உயர்தர விளையாட்டுத் திறன் மற்றும் களத்தில் வீரர்கள் காட்டிய கண்ணியம் ஆகியவை இந்தப் போட்டியை ஒரு மிகச்சிறந்த சமூக நிகழ்வாக மாற்றியது.

### வெற்றியாளர்கள் & இரண்டாம் இடம்

விறுவிறுப்பான இறுதிப் போட்டிகளுக்குப் பிறகு, ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியாளர்களும் இரண்டாம் இடம் பெற்ற அணிகளும் அறிவிக்கப்பட்டனர்.

#### ஆண்கள் டபிள்ஸ்

- முதல் இடம்:

  Chennai — பிரபு தனபால் & ராஜு
- இரண்டாம் இடம்:

  Venkat & Pavan Team — வெங்கட் புட்சக்யாலா & பவன் பைடிகண்டா

#### மிக்ஸ்டு டபிள்ஸ்

- முதல் இடம்:

  Shake N' Bake — ரய்னா பன்சால் & ரோஹித் மால்ஹோத்திரா
- இரண்டாம் இடம்:

  Whistle Podu — சரவணன் அண்ணாமலை & நிகிதா கார்த்திக்

#### ஜூனியர் டபிள்ஸ்

- முதல் இடம்:

  QOP Youth — ரியா அருமுகம் & ஹிர்த்விக் அருமுகம்
- இரண்டாம் இடம்:

  Danny and Debbie — டானியல் தேவசகாயம் & டெபோரா தேவசகாயம்

  இறுதிப் போட்டிகள் முழுவதும், உயர்தர விளையாட்டுத் திறன் மற்றும்திட்டமிடல் வெளிப்பட்டது.

### முடிவுரை:

தலைவர் திரு. செந்தில்குமார் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் செயலாளர் திரு. அறிவுடைநம்பி புகழேந்தியின் திட்டமிடுதலினாலும் நடத்தப்பட்ட இந்த முதல் பிக்கள்பால் போட்டி, வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் விளையாட்டுத் துறையில் மற்றொரு மைல்கல்லாகும். இத்தகைய வெற்றிகரமான முன்னெடுப்புகள் நமது சமூகத்தை விளையாட்டு மூலமாக மிகுந்த ஊக்கத்துடன் தொடர்ந்து ஒன்றிணைக்கும் என்பதில் ஐயமில்லை.



# வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்

# பொங்கல் விழா 2026

அமெரிக்காவின் தலைநகர் பகுதியான வாசிங்டன் வட்டாரத்தில் இயங்கி வரும் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் ஆண்டுதோறும் தமிழர் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டாடும் வகையில் பொங்கல் விழாவை சிறப்பாக நடத்தி வருகிறது. அதேபோல் 2026 ஆம் ஆண்டிற்கான பொங்கல் விழாவும் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்த நிகழ்வாக லாங்கிலி உயர்நிலைப் பள்ளி, மெக்லீன் வெர்ஜினியாவில் நடைபெற்றது.

பொங்கல் விழா தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் திருக்குறள் மறையோதலுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து செயற்குழு உறுப்பினர் எழில்வடிவன் கலைவாணன் வரவேற்புரை வழங்கினார். அவரது வரவேற்புரையுடன் விழாவின் கலாச்சார நிகழ்ச்சிகள் உற்சாகமாகத் தொடங்கின.

இந்த நிகழ்வில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழர் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் நடனங்கள், இசை நிகழ்ச்சிகள், வில்லுப் பாட்டு, குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் ஆகியவை கலந்து கொண்டவர்களை மகிழ்வித்தன. அமெரிக்கா மல்லர்கம்பம் பேரவை சார்பாக திரு. கவுரவ் மற்றும் சென்னை எக்ஸ்பிரஸ் திருமதி தேவிகா இணைந்து நடத்திய மல்லர்கம்பம் நிகழ்வு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. சின்னஞ்சிறு குழந்தைகள் கம்பத்தில் ஏறி பல சாகச வித்தைகளை நிகழ்த்திக் காட்டினார். மக்களும் அவற்றை உற்சாகத்துடன் பார்த்து மகிழ்ந்தனர். சமூக ஒற்றுமையையும் தமிழர் மரபையும் முன்னிறுத்தும் வகையில் இந்த விழா சிறப்பாக அமைந்தது.




சென்னை எக்ஸ்பிரஸின் சிறப்பான உணவு மற்றும் சிற்றுண்டிகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நிகழ்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சமாக, 2026 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் புதிய செயற்குழு அதிகாரப்பூர்வமாகப் பதவி ஏற்றுக் கொண்டது. தலைவர் செந்தில் குமார் மலைக்கொழுந்து, தலைவர் உரை ஆற்றினார். அதில் அவர், தமிழ்ச் சங்கம்




மாறிவரும் அரசியல் சூழலில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு ஒவ்வொரு நிகழ்வையும் நடத்தி வருவதாகவும், மக்கள் தமிழ்ச்சங்கத்திற்குக் கொடுக்கும் பேராதரவிற்கு நன்றியையும் கூறினார். இதைத் தொடந்து செயலாளர் அறிவுடைநம்பி புகழேந்தி, செயலாளர் உரையை ஆற்றினார். அதில் தமிழ்ச் சங்கம் சென்ற ஆண்டு நடத்திய நிகழ்வுகளைப் பட்டியலிட்டு அதற்கு உறுதுணையாகச் செயல்பட்ட கொடையாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். புதிய நிர்வாகிகள் சங்கத்தின் வளர்ச்சிக்கும் சமூக சேவைக்கும் தொடர்ந்து உழைப்பதாக உறுதியளித்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் புதிய செயற்குழுவினருக்கு வாழ்த்துகளையும் ஆதரவையும் தெரிவித்தனர். சமையல் போட்டி மற்றும் கோலப்போட்டி நடைபெற்றது. மக்கள் உற்சாகமாக கலந்து கொண்டு சிறப்புப் பரிசுகள் பெற்றனர்.



**திருமதி அறிவுப்பொன்னி துரை சந்திரசேகரன்**

காலாண்டு இதழ், தென்றல் முல்லை - பொங்கல் விழா 2026 சிறப்புப் பதிப்பு திரு. பாலா குப்புசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு விழாவின் முக்கியச் சிறப்பு விருந்தினராக பிரபல பின்னணிப் பாடகர் சத்யன் மகாலிங்கம் கலந்து கொண்டார். அவர் தமிழ்த் திரைப்படங்களில் தாம் பாடிய பல பிரபலமான பாடல்களை மேடையில் நேரடியாகப் பாடி இரசிகர்களை உற்சாகப்படுத்தினார். அவரது இனிய குரலும் ஆற்றலான மேடை நிகழ்ச்சியும் பார்வையாளர்களை மிகுந்த மகிழ்ச்சியடையச் செய்தது. இரசிகர்கள் அவரது பாடல்களுடன் இணைந்து பாடியும் ஆடியும் நிகழ்ச்சியை உற்சாகமாக அனுபவித்தனர்.

பொங்கல் விழா தமிழர் பண்பாடு, மரபு மற்றும் சமூக ஒற்றுமையைக் கொண்டாடும் முக்கிய நிகழ்வாக இருந்தது. குடும்பங்களும் நண்பர்களும் ஒன்று கூடித்






தமிழர் பாரம்பரியத்தைப் பகிர்ந்து கொண்ட இந்த விழா அனைவருக்கும் நினைவில் நிற்கும் இனிய அனுபவமாக அமைந்தது.

மொத்தத்தில், 2026 ஆம் ஆண்டின் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் பொங்கல் விழா மகிழ்ச்சி, இசை மற்றும் கலாசாரத்தின் நிறைவான கொண்டாட்டமாக சிறப்பாக நடைபெற்றது.

### பிரெடெரிக் தமிழ்ப்பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழா

# ஒற்றுமையும் உற்சாகமும் பொங்கிய திருநாள்

எங்கள் பிரெடெரிக் தமிழ்ப் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழாவை மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடினோம். 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 அன்று நடைபெற்ற இந்த விழா, எங்கள் பள்ளிக் குடும்பத்தின் ஒற்றுமை, பாரம்பரியம் மற்றும் மாணவர்களின் திறமைகளை அழகாக வெளிப்படுத்திய ஒரு நினைவுகூறத்தக்க நாளாக அமைந்தது.

விழா கோலப் போட்டியுடன் துவங்கியது. மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து வரைந்த வண்ண மயமான கோலங்கள் பண்டிகை உணர்வை மிக அழகாக வெளிப்படுத்தின.



முனைவர் சங்கீதா சண்முகம்

அதன் பின்னர் மேடை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. வரவேற்பு மேசை அழகாக அலங்கரிக்கப்பட்டு, அனைவரையும் அன்புடன் வரவேற்கும் வகையில் அமைந்திருந்தது. மேடை அலங்காரமும் பாரம்பரிய நயத்துடன் அமைந்து, முழு நிகழ்விற்கும் ஒரு பண்டிகை தோற்றத்தை அளித்தது.

தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் வரவேற்பு உரையுடன் நிகழ்ச்சி இனிதே துவங்கியது. தொடர்ந்து அட்டவணைப்படி நிகழ்ச்சிகள் பல கட்டங்களாக ஒழுங்காக நடைபெற்றன. தனிநபர் மற்றும் குழு நிகழ்ச்சிகள் இணைந்து இடம்பெற்றன. முன் மழலை முதல் உயர்நிலை மாணவர்கள் வரை அனைவரும் தங்கள் திறமைகளை தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்தினர். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கைதட்டல், ஆரவாரம், விசில் ஒலிகள் இடையறாது ஒலித்தன.

இந்த விழாவின் முக்கிய அம்சமாக, பல மாணவர்கள் தொகுப்பாளர்களாக பங்கேற்று நிகழ்ச்சியை மிகச் சரளமாகவும் உற்சாகமாகவும் முன்னெடுத்தனர். அவர்களின் தெளிவான தமிழ்ப் பேச்சு, தன்னம்பிக்கை மற்றும் ஈடுபாடு அனைவரையும் கவர்ந்தது.

நிகழ்ச்சியின் இடையே நடைபெற்ற பட்டி மன்றம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. மாணவர்கள் சிந்தனையூட்டும் கருத்துகளுடன் தங்கள் உரைகளை வழங்கினர். தலைவர் பாலா குப்புசாமி அவர்கள் நடுவராக வழங்கிய நகைச்சுவை கலந்த கருத்துகள் அரங்கம் முழுவதும் சிரிப்பைப் பரப்பின. கைதட்டல்கள் மற்றும் மகிழ்ச்சியான ஆரவாரம் தொடர்ந்து ஒலித்தது.

மேடையில் நடைபெற்ற பொங்கல் பற்றிய






நிகழ்ச்சியின் விளக்கப் பலகை, மாணவர்களின் அறிவையும் கலாச்சாரப் புரிதலையும் வெளிப்படுத்தியது. அவர்கள் எடுத்துரைத்த விதம் அனைவரையும் கவர்ந்தது.

இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் மாணவர்களும் பெற்றோர்களும் எடுத்த கடின உழைப்பின் பிரதிபலிப்பாக இருந்தது. ஆடை அலங்காரம், ஒத்திகை மற்றும் மேடை நம்பிக்கை ஆகிய அனைத்திலும் அவர்கள் காட்டிய அர்ப்பணிப்பு தெளிவாகத் தெரிந்தது.

மேலும், பெரியவர்கள் கலந்து கொண்ட குழு நடன நிகழ்ச்சி மிகவும் அருமையாக அமைந்தது. அந்த நிகழ்ச்சி அனைவரிடமும் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

கூடுதலாக, மரபிசைக்குழுவின் நிகழ்ச்சி இந்த விழாவின் முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது. அவர்களின் உற்சாகமூட்டும் இசை அனைவரையும்














கவர்ந்தது. அந்த இசையின் தாளத்திற்கு குழந்தைகளும் பெரியவர்களும் மேடைக்கு வந்து இணைந்து ஆடியது விழாவின் உச்சக்கட்ட மகிழ்ச்சியாக அமைந்தது. அரங்கம் முழுவதும் உற்சாகமும் கொண்டாட்டமும் நிரம்பியது.

எங்கள் தலைவர் பாலா குப்புசாமி அவர்களின் இனிய குரலில் வழங்கப்பட்ட பாடல் நிகழ்ச்சி, அனைவரையும் கவர்ந்த, நினைவில் நிற்கும் தருணமாக அமைந்தது.

விழாவில் கலந்து கொண்ட அனைவரும் பாரம்பரிய இந்திய உடைகளில் அழகாகத் தங்களை அலங்கரித்திருந்தனர். அந்தப் பாண்டிகைத் தோற்றம், முழு நிகழ்வையும் மேலும் வண்ணமயமாக மாற்றியது.

நிகழ்ச்சிகளுக்கு இடையில் வழங்கப்பட்ட சிற்றுண்டி மற்றும் தேநீர், எங்கள் மனங்களையும் வயிறுகளையும் திருப்திப்படுத்தின. அனைவரும் ஒன்றாகக் கலந்து கொண்டதால், அந்த இடம் ஒரு பெரிய குடும்பமாக மாறியது.

இந்த விழாவின் வெற்றிக்கு மிகப்பெரிய காரணம் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் எடுத்த அயராத முயற்சிதான். ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவர்கள் செய்த கடின உழைப்பு, நேரம் மற்றும் அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இருந்தது.

அத்துடன், மாணவர்களை வழிநடத்தி, பயிற்சி அளித்து, மேடையில் தன்னம்பிக்கையுடன் நிற்கச் செய்த ஆசிரியர்களின் பங்களிப்பு அளப்பரியது. அவர்களின் அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் உறுதி இந்த விழாவின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக அமைந்தது. அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளும்.

நிகழ்ச்சியின் இறுதியில் பரிசளிப்பு நடைபெற்றது. அதன் பின்னர் நன்றியுரை, தமிழ்ப்பண் மற்றும் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

இறுதியாக, அனைத்து மாணவர்கள், பெற்றோர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இணைந்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அந்தத் தருணம், இந்த இனிய நாளின் அழகான நினைவாக என்றும் நிலைத்திருக்கும்.

மொத்தத்தில், சிரிப்பு, கைதட்டல், ஆரவாரம், பாசம் மற்றும் ஒற்றுமை அனைத்தும் கலந்த இந்தப் பொங்கல் விழா, எங்கள் பிரெடெரிக் தமிழ்ப்பள்ளியின் ஆன்மாவை பிரதிபலித்த ஒரு மறக்கமுடியாத குடும்பத் திருவிழாவாக அமைந்தது.


இபாட்டி
iPaatti
Chantilly, VA
Saturdays
கூடு
செயல்வழிக் கல்வி | கலைவழிக் கல்வி
ACTIVITY-BASED LEARNING | TRADITIONAL ART FORMS
தனித்துவமான தமிழ்ப் பள்ளி!
Now Hiring Tamil Teachers!
Learn to Speak. Read. Write. Tamil the joyful way!
தற்காப்புக் கலைகள்
மரபுக் கலைகள்
கதைகள்
கணிதம்
வாழ்வியல் செயல்பாடுகள்
பாடல்கள் + விளையாடுகள்
Age
3 to 14
Years Old
SCAN
ENROLL NOW
+1 (703) 966-1633
+1 (703) 901-7904
ipaatti.us

# தாய் கிழவி

நகரம் இல்லாத சிற்றூர்களிலும், கிராமங்களிலும் சில வயதான மூதாட்டியார் இருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் பட்ட துன்பங்களும்,அவமானங்களும், சோதனைகளும், வேதனைகளும் அவர்களை ஒரு இரும்புப் பெண்மணியாக மாற்றியிருக்கும். அவர்கள் யாருக்கும் பயப்பட மாட்டார்கள். யாராவது தன்னை எதிர்த்துப்பேசினாலோ அல்லது குறை சொன்னாலோ அவர்களை வெளுத்து வாங்கி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு ஊர்க் கிழவியின் கதைதான் இந்த தாய்க்கிழவி.



திருமதி மோனிகா ஜெரால்டு

ராதிகா பவுனுத்தாயி என்ற தாய் கிழவியாக ஊரில் எல்லோருக்கும் வட்டிக்கு விட்டு எல்லோரையும் மிரட்டி தினமும் பணத்தை வசூல் செய்கிறார்.ஊரே இவர் எப்போது இறப்பார் என காத்திருக்கும் அளவிற்கு அவரை வெறுக்கிறது. அவருக்கு மூன்று மகன்கள் மற்றும் ஒரு மகள் இருக்கிறார். மகள் கணவரை விட்டு அம்மாவிற்காக வீட்டோடு வாழ்ந்து வருகிறார். இந்தச் சூழ்நிலையில் ராதிகாவுக்கு உடல்நிலை மிக மோசமாக இன்னும் 2 தினங்களில் இறக்கப் போகிறார் என ஊரே திரண்டு வர அங்கு தான், ராதிகா 160 பவுன் சேர்த்து வைத்துள்ளார்கள் என்று மூன்று மகன்களுக்கு தெரிய வருகிறது.

இதனால் அந்த நகையை தங்கள் சகோதரி மற்றும் அவர் மாப்பிள்ளைக்குத் தெரியாமல் எடுக்கத் திட்டம் தீட்டுகிறார்கள். அதன் பிறகு நடக்கும் நகைச்சுவை கலந்த கலாட்டா கூத்துதான் இந்த தாய் கிழவி. ராதிகா தாய் கிழவி கதாபாத்திரம் நடித்துள்ளார் என்பதை விட வாழ்ந்துள்ளார் என்று தான் சொல்ல வேண்டும், படம் முழுவதும் படுத்த படுக்கையாக இருந்தாலும் தனக்குக் கிடைத்த இடத்தில் அட்டகாசம் செய்துள்ளார், ஊரில் ஒவ்வொருவரும் அவரைப் பார்த்து தெறித்து ஓடும்படி காட்டியதற்கு அவர் கதாபாத்திரமும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ராதிகா மட்டுமில்லை பால சரவணன், அருள் தாஸ், சிங்கம்புலி இவர்களுடைய மகள்கள், ஏன் ஒரு குடிகார கதாபாத்திரத்தில் வருபவர் கூட தன்னுடைய சிறு கதாபாத்திரத்தில் கூட தங்களுடைய நடிப்பால் மிளிரச் செய்துள்ளார்கள் . அதிலும் சிங்கம்புலி கமல் இரசிகராக அவர் போடும் பாடல்கள் இடைவேளை, இறுதிக்காட்சி எல்லாம் சரவெடி கொண்டாட்டம் தான்.

படம் ஆரம்பித்த சில நிமிடங்களில் ராதிகா படுத்த படுக்கையாக, அட இனிமே என்ன என்று யோசித்தால் அதை வைத்தே பெண்ணியம், சம உரிமை என்றெல்லாம் நமக்கு இயக்குநர் பாடம் எடுத்தது எல்லாம் மிகச்சிறப்பு. அதை கிளைமேக்ஸில் ராதிகா வாயிலே சொல்ல வைப்பது தனிச்சிறப்பு. அதிலும் பெண் சும்மா இல்லாமல்





ஏதாவது வேலை செய்து சம்பா திக்க வேண்டும், அது தான் அவளை கடைசி வரை காப்பாற்றும், அது தான் உண்மையான சுதந்திரம் போன்ற வசனங்களுக்கு திரையரங்கில் கைத்தட்டல் அள்ளுகிறது. அதோடு மருத்துவமனையில் வட இந்திய டாக்டர் ஒருவர் ஆங்கிலம் தெரியாதவர்களிடம் ஆங்கிலத்தில் பேச, அதை பெரிய மருத்துவர் ஒருவர் கண்டித்து மற்றவர்களுக்குத் தெரியாத மொழியில் பேசி பந்தா காட்டுவது பெருமை இல்லை, பைத்தியகாரத்தனம் என சொல்லும் இடம் அருமையோ அருமை.

தமிழ் சினிமாவில் அறிமுக இயக்குநர்கள் அவ்வப்போது தங்களின் தனித்துவமான திரைக்கதை மூலம் ஆச்சரியப்படுத்துவது உண்டு. அந்த வரிசையில், இயக்குநர் சிவகுமார் முருகேசன் நகைச்சுவை, சென்டிமென்ட், ஆழமான சமூகக் கருத்துகள் என சரியான விகிதத்தில் கலந்து ஒரு தரமான திரை விருந்தை கொடுத்துள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். முதல் பாதி முழுக்க நகைச்சுவை, இரண்டாம் பாதியில் சென்டிமென்ட் என ஒரு நேர்த்தியான திரைக்கதையை எழுதி தனக்கென ஒரு மிகச் சிறந்த தொடக்கத்தை பதிவு செய்திருக்கிறார். படத்தின் தயாரிப்பாளர் சிவகார்த்திகேயன் தான் அடுத்து நடிக்கும் இரண்டு படங்களையும் இயக்கும் வாய்ப்பை சிவகுமார் முருகேசனுக்கே கொடுத்திருப்பதில் ஆச்சர்யம் இல்லை. நிவாஸ் கே, பிரசன்னாவின் பின்னணி இசை கிராமத்துச் சூழலுக்கு உயிர் கொடுத்துள்ளது. விவேக் விஜயகுமாரின் கேமரா, மதுரை சுற்றுப்புற கிராமங்களின் அழகை கண்களுக்கு விருந்தாக்குகிறது. மசாலா படங்களை மட்டுமே வெற்றி பெறச் செய்யாமல் இந்த மாதிரியான பெண் கதா பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் தரும் திரைப் படங்களையும் வெற்றி பெறச்செய்து தமிழ் சினிமாவை ஊக்குவிப்போம்.





UNIEX
COURIER
BUY & SHIP 4 U
16 YEAR'S OF EXCELLENCE
Proud Courier Partner Of World Tamil Conference , USA
சித்திரைத் திருநாள் வாழ்த்துகள்
Offer Discount Code SATS
TAMILNADU TO USA COURIER
10kg Rs 875 per kg
13kg Rs 800 per kg
30kg Rs 750 per kg
+91 93808 39266
www.uniexcourierandcargo.com
COURIER
CARGO
PACKERS & MOVERS
BAGGAGES
•Best Price •Pickup Facility •Live Tracking
Packing Facility •Reliable Service •Customer Service
* DELIVERY 4 TO 7 DAYS

# உலகத் தமிழிசைப் பல்கலைக்கழகம்

## World Tamil Music University

(தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

IDS
Innovative Dynamic Solutions Global Inc.

ISOME

உலகத் தமிழிசை மேம்பாட்டு மையம்
WORLD TAMIL MUSIC DEVELOPMENT CENTER





**BABU VINAYAGAM**
PRESIDENT

Office:
13800 Coppermine Rd,
Herndon, VA - 20171
www.idsglobalinc.com

Email:
babu@idsglobalinc.com
Work: 703-880-6749
Mobile: 703-939-5465

# SELVAM

**DEMOCRAT FOR
MONTGOMERY COUNTY COUNCIL
AT-LARGE**



I am a U.S. Air Force veteran who served in Afghanistan, an emergency room doctor, and a humanitarian worker. I have dedicated my life to service and leadership when it matters most.



Join me in building a brighter future, for our children, our seniors, and our entire community. I promise to bring courageous advocacy and compassionate leadership, focused on solutions that have a real, measurable impact on your life.



**I'm participating in Public Financing and I need many small donations to be successful. Thank you!**

**Please donate here:
www.prabuselvam.com**



## Don't forget to vote in June 2026!

Authorized by Prabu Selvam for Montgomery County
Ankit Aggarwal, Treasurer